தென்மொழி

T. 5849

கதைக்கின்றோம் -நலம் சிதைக்கின்றோம்!

ஆளுக்கொரு வண்ணக் கொடி!
நாளுக்கொரு புத்தியக்கம்!
தோளுக்கொரு நீளத்துண்டு–எனத்
தேளுக்கதி காரம் பெற
அலைகின்றோம் – சீர்
குலைகின்றோம்!

கூட்டத்திற்கோர் மேடை கட்டி
ஈட்டத்திற்கோர் உண்டில் ஏந்தி
ஆட்டத்திற்கோர் நடிகை காட்டி – மன
நாட்டமெல்லாம் பொருள்மேல் வைத்துப்
பொய்க்கின்றோம் – கரவு
வைக்கின்றோம்!

எதுகைமோனை அடுக்குச் சொற்கள்
முதுமைத் தமிழில் பேசக் கற்று
மதுவை ஊனைக் கிறக்க உண்டு –பெரும்
புதுமை நலன்கள் வளங்கட் காக
நடிக்கின்றோம் – காசு
அடிக்கின்றோம்!

சே.எண்: 26046

மடமைச் சாதி மதத்தில் வீழ்ந்து
வடவர் பார்ப்பார் வஞ்சம் ஆழ்ந்து
உடைமை பெருக்க உண்மை தவிர்த்து –இனக்
கடமை உணராக் கழுதைகளாகித்
கதைக்கின்றோம் –நலம்
சிதைக்கின்றோம்!

– பாவலரேறு

சுவடி 28
ஓலை 1

விலை
உருபா : 4.00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

ஏடுகளின் பார்வை :

விடுதலைக் கனலை மூட்டிய சுடரொளி

பாவலரேறு பெருஞ்சித்திரனார்... தமது இறுதிமூச்சு நிற்கும் வரை தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டின் விடுதலைக்காகவும் அயராது உழைத்தார். சாதி வேறுபாடற்ற, பார்ப்பனீயம் ஒழிந்த குமுகாயத்தைக் காண விழைந்த பாவலர்.

இந்தி - ஆங்கில சமற்கிருத வல்லாண்மையை எதிர்த்ததற்காகவும் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக எழுதிய 'குற்றத்'திற்காகவும் ஆளும் பிரிவினர் அவரை 'மிசா; என்.எசு.ஏ; தடா' போன்ற கொடிய சட்டங்களில் தளை செய்து சிறையில் அடைத்துத் துன்புறுத்தினர். பதவி நலத்திற்காகவும், பணத்திற்காகவும், அடக்கு முறைக்கு அஞ்சியும் இரண்டகம் செய்யும் தொடை நடுங்கிகளுக்கு இடையில் கடைசிவரை தாம் கொண்ட கொள்கைகளுக்கு உறுதியாய் இருந்த தமிழறிஞர்.

தமிழரின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர். பொத்தகங்களிலேயே புரட்சி பேசும் 'தமிழறிஞர்களுக்கு' நடுவில் போராட்டங்கள் பல நடத்திச் சிறை சென்றவர். பலரின் நெஞ்சில் விடுதலைக் கனலை மூட்டிய சுடரொளியாய் திகழ்ந்தவர்.

- மக்கள் பண்பாடு.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. கடைசிவரை தமிழர்க்கும், தமிழர் விடுதலைக்கும் அயராது குரல் கொடுத்த, தனித்தமிழைப் பேணி வளர்த்த ஐயா இன்று நம்மிடையே இல்லை.

ஆனால், பாவலரேறு ஐயா சொன்ன கருத்துகள், அவர் எழுதிய நூல்கள், நம்மிடம் உள்ளன. ஆழமாய்ப் படிப்போம். அதன் மூலம் அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வோம். தமிழர் விடுதலைக்குக் குரல் கொடுப்போம். **- தமிழ் இன மாணவர் முழக்கம்.**

தாம் நம்பும் கொள்கைக்காகத் தம்மையே ஈடுபடுத்திக் கொண்ட சான்றோர்களுள் (இலட்சியவாதிகளில்) தலைமையானவர் பெருஞ்சித்திரனார். பொது வாழ்க்கையில் அவர் பெருந்துன்பங்களையும் துயரங்களையும் பட்டறிந்தவர்.

அவர் தமது உயிர்நாடியாகக் கருதிய தமிழ்மொழி, தமிழ்நாட்டிலேயே சீந்துவாரற்ற - புறக்கணிக்கப்பட்ட மூன்றாந்தர மொழியாகிக் கிடப்பது மொத்தத் தமிழனுக்கும் தலைக்குனிவு ! அந்தத் தலைக்குனிவைப் போக்கப் பாடுபட்ட மாபெரும் போராளி இலக்கு வெற்றி பெறுவதற்கு முன்பே தமது வாழ்வை முடித்துக்கொண்டு, நம்மை துன்பத்தில் ஆழ்த்தியுள்ளார்.

பெருஞ்சித்திரனாருக்குத் தமிழர்கள் செய்யவேண்டிய நன்றிக் கடன், தமிழ் மொழியை நமக்குத் தலைமொழியாக ஏற்றுப் போற்றி உயர்த்துவதுதான்.

தமிழே நம்மை ஆளும் நிலை வந்தால் அதுவே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன்!

- நாத்திகம்

T. 5849



என்னைப் பற்றி எழுதாதீர்கள்;
என்தமிழ் மொழிக்கே எழுதுங்கள்!
என்னைப் பற்றிப் பேசாதீர்கள்;
இனமேம் பாட்டைப் பேசுங்கள்!
என்னைப் பற்றி இரங்காதீர்கள்;
ஏழைத் தமிழர்க் கிரங்குங்கள்!
என்னைப் பற்றி வருந்தாதீர்கள்;
இனத்துக் காக வருந்துங்கள்!

மொழியை இனத்தை நாட்டை மீட்க
முனைந்து துணிந்து நில்லுங்கள்!
பழியைத் துயரைப் பார்க்க வேண்டாம்;
பணிசெய் கடமை பாருங்கள்!
இழிவை இழப்பை எண்ணாதீர்கள்;
இனத்தின் ஏற்றம் எண்ணுங்கள்!
அழிவைப் பற்றி நினையாதீர்கள்;
அருந்தமிழ் ஆக்கம் நினையுங்கள்!

“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்முச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி : 28) தி.பி.உ0உசு – நளி (திசம்–’95) (ஓலை 1)

இலங்கை - தமிழீழச் சிக்கலில் இந்தியா அமைதியாயிருக்கிறதா?

தமிழீழத்தில் மக்களைக் குப்பல் குப்பலாகக் கொன்று குவித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியுள்ளது சிங்களப் படை. தப்பிப் பிழைத்தவர்கள் ஏதிலிகளாக அங்கிருந்து வெளியேறி விட்டார்கள். வெறுமைப் பட்ட நகரத்தில் பிணக் குவியல்களுக்கிடையே கோட்டையில் கொடி யேற்றி வெற்றிவிழாக் கொண்டாடிக் களிக்கின்றது இலங்கை அரசு!

இலங்கை - தமிழீழச் சிக்கலில் இந்திய அரசு அமைதி பூண்டிருப்பதாக இங்குள்ள ஏடுகள் சில குறிப்பிடுகின்றன. தலைமை அமைச்சர் வாய்மூடிக்கிடப்பதைவிட்டுக் கண்டனக் குரல் எழுப்ப வேண்டும்; சிக்கலுக்குத் தீர்வுகாண இந்தியா ஆவன செய்ய வேண்டும் என்று அரசியல் தலைவர்கள் சிலர் கோருகின்றனர்.

உண்மையில் இந்திய அரசு இலங்கை-தமிழீழச் சிக்கலில் அமைதி பூண்டிருக்கிறதா?

‘நரசிம்மராவ் சிரிக்கவில்லை; செய்தியாளர்களுக்குச் செவ்வி அளிக்கவில்லை, தாளிகைகளில் அறிக்கை விடவில்லை’ - என்பன

வெல்லாம் இந்தியா அமைதி பூண்டிருப்பதன் அடையாளங்களாகி விட மாட்டா!

இலங்கை அரசு, போராளிகளுடன் இணக்கமாகப் பேச்சுத் தொடங்கிய நிலையில் சந்திரிகா அம்மையார் இந்தியாவுக்கு வந்து வரவழைக்கப்பட்டு நரசிம்மராவைச் சந்தித்துச் சென்ற பிறகுதான் அதன் போக்கு திசைமாறியது.

கொழும்பில் கன்னெய் கிடங்கு தீப் பற்றியது. ஒரு நேர்ச்சியன்று. சிங்களப் படையினர் நடத்தும் கொடும்பாடுகளுக்கு மறுதலையான எதிர்தரப்பு நடவடிக்கை. ஆயினும் அச் செய்தியைக் கேள்விப்பட்ட வுடனேயே ஓடோடிச் சென்று தீயை அணைத்து இலங்கை அரசுக்கு உதவிசெய்தது இந்திய அரசு.

கன்னெய்க் கிடங்கு தீப்பற்றிய சிறிது நேரத்திலேயே சந்திரிகா அங்கிருந்து அமெரிக்காவுக்குச் சென்று விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ மக்கள் மீது சிங்களப் படை கடுந்தாக்குதல் நடத்தும் போதெல்லாம் முன்கூட்டியே திட்டமிட்டு இந்தியப் படைத்துறையின் மேனிலை அதிகாரிகள் தமிழ்நாட்டுக்கு வருகை தந்து கடலோரக் காவலைக் கண்காணிப்பதிலும் எச்சரிப்பதிலும் முனைப்பாய் இருக்கின்றனர்.

தமிழீழத்தின் தீவுப்பகுதிகளில் போராளிகளை எதிர் கொள்ள முடியாமல் திணறிப் பின்வாங்கியோடிய சிங்களப் படை, முன்னை இந்திய அமைதிப் படையினர் வகுத்தளித்த படைத்தகையைக் கடைப்பிடித்தே இப்போது முன்னேறுகின்றது.

தமிழ்நாட்டில் வீடு வீடாகச் சென்று கையேந்திப் பெறப்படும் உணவு உடை முதலிய பொருள்களையும் மருந்துகளையும், தாக்குதலுக்கு ஆட்பட்டுத் தவிக்கின்ற ஏதிலிகளான தமிழீழ மக்களுக்கு செங்குறுக்கைக் கழகத்தின்வழி அனுப்பிவைக்கவும் இந்திய அரசு தடை செய்கிறது! இப்படித் தமிழீழ ஏதிலிகக்கு மாந்தநேய உதவிகள் மறுக்கப்பட்டாலும், சந்திரிகாவின் தாயாருக்குக் கேரளத்தில் கெடுபிடிமிக்க பாதுகாப்புடன் தடபுடலான மருத்துவம் நடைபெறு வதில் குறைச்சல் இல்லை!

அமெரிக்கப் படைக்கருவி வலிமையோடும் இந்திய உளவு நிறுவனத்தின் சூழ்ச்சித் துணையோடுமே இலங்கை அரசு களத்தில் நிற்கிறது. இன்னுஞ் சற்று உன்னித்துப் பார்த்தால் இந்திய அரசுதான் சிங்களப் படையின் பின்நின்று அதை உந்திவிட்டுப் போர் அழிம்பு களை நடத்துகிறது என்பது புலப்படும்.

இத்தனையுஞ் செய்யும் இந்திய அரசு அமைதி பூண்டிருப்பதாகக் கூறுவது எத்துணைப் பேதைமை!

இந்தியாவின் தலைமையமைச்சர் இலங்கை அரசின் நம்பிக்கை நாயகமாகத் திகழ்கிறார். 'நரசிம்மராவ் எங்கள் ஆருயிர் நண்பர்' என்று சிங்களவர்களால் அவர் போற்றப் பெறுகின்றார். இந்தியா தமக்கு உதவி செய்வதாகக் கொழும்பு அரசு வட்டாரங்களே வெளிப் படையாக ஒப்புக் கொள்கின்றன. "இலங்கை அரசு மேற்கொள்ளும் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு இந்தியா பெரிதும் உதவுகிறது" என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் இலட்சுமண் கதிர்காமா அறிவித்துள்ளார்.

இவற்றையெல்லாம் இங்குள்ள இனப்பகை ஏடுகள் அறிய மாட்டா என்று சொல்ல முடியாது. ஆனால், இந்திய அரசு வாய்மூடிக் கிடப்பதாக அவை கதைப்பது ஒரு வகைக் சூழ்ச்சியே யன்றி வேறில்லை.

இங்குள்ள அரசியல் தலைவர்களும் பிறரும், ஏதிலிகளாகித் தவிக்கும் தமிழீழ மக்களைக் காப்பாற்றுமாறு இந்திய அரசைக் கோருவது எந்த வகையில் அறிவுடைமையாகும்?

பன்னாட்டுமன்றம் அமைதிப் படையை அனுப்ப வேண்டும் என்பது மற்றுஞ் சிலர் கோரிக்கை. உண்மையில், பன்னாட்டு மன்றம் என்பதுதான் என்ன? அமெரிக்க வல்லரசின் வேறொரு வடிவமே யன்றோ! முன்னை இந்திய அமைதிப்படையால் நேர்ந்த நிலையினும் பன்மடங்காகுமே தவிர வேறு என்ன நடவடிக்கையை எதிர்பார்க்க முடியும்? சட்டிக்குத் தப்பி அடுப்பில் விழுந்த கதையாகவும் கூடும்!

இனி, இந்திய அரசு இலங்கை - தமிழீழச் சிக்கலில் தலை யிடாமல் - இட்ட தலையையும் இழுத்துக் கொண்டு, சூழ்ச்சி நடவடிக்கைகளை முழுமையாகக் கைவிட்டு உண்மையிலேயே அமைதி பூண்டால் அதுவே போதுமானது. ஆனால் அது அத்தகைய முடிவுக்கு வரவேண்டுமானால், அப்படிப் பணிய வைக்கும் அளவுக்குத் தமிழ்நாட்டு மக்கள் மாபெரும் போராட்டத்தை நடத்தி யாக வேண்டும். அதுவே தமிழீழ மக்களின் துயர்துடைக்க நாம் மேற்கொள்ளும் தக்க நடவடிக்கையாக இருக்கும்!

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு — குறள் 878

— இறை



நூறாசிரியம்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

பாட்டு 69

சாய்தலு மில்லேம்; சாயினும் நனைவிழி
ஓய்தலு மில்லேம்; ஓயினும் புழுங்குளம்
மாய்தலோ யாண்டையு மிலமே! தோய்துயர்
எவனுமைத் தொடருவ தென்குவீ ராயின்;
குடிபுரந் துவக்கும் கொற்றமு மில்லை;
முடிபணிந் துய்யுங் குடியுமீங் கில்லை;
நிறையின் வாங்கிக் குறையின் மாறும்
கறைநெஞ் சத்துக் கள்வரே வணிகர்;
அஞ்சுடர் தவறினும் அறந்தவ றாத
செஞ்சொல் மன்றுந் தந்திறங் குன்றிய;
கூத்துங் கலையுந் தீத்திறம் பட்ட;
பூத்துயர் கற்பின் மடவரும், புரைந்து
மனைமுடி கழற்றிப் புனைமுடி பூண்டார்!
வலியோர் வலிந்தார்; மெலியோர் மெலிந்தார்;
குலம்பல வாகிக் கலாம்பல விளைத்த;
தந்துயர் பொறைந்து பிறர்துயர் கரையும்
செந்நெறிச் சான்றோர்க் கேமமு மின்றே!
புல்லென் உவகைக் குள்ளம் விற்று
நல்லியல் பழிகுவர்; நாணுத் துறந்தார்;
பொருள் தனி யொன்றே போற்றும்
இருள்மிகு வாழ்வோர்க் கிரங்குகை யானே!

பொழிப்பு :

யாம் உடலைச் சாய்த்துப் படுத்தலும் இல்லேம்; ஓரோவழிப் படுப்பினும் ஈரந்தோய்ந்த விழிகளை மூடித் துயிலுதலும் இல்லேம்; ஓரோவழித் துயிலினும் வெதும்புகின்ற எம் மனம் மறதி கொள்ளுதல் ஒரு போதும் இலேம்!

உரை : திருக்குறள்மணி இறைக்குருவனார்.

'இங்ஙனம் செறிந்த துயரம் நம்மைத் தொடருவது ஏன்?' என்று வினவுவீராயின், குடிமக்களைக் காத்து வாழ்வித்து உளம் மகிழும் நல்லரசும் நாட்டில் இல்லை; அரசுக்கு அடங்கி நடந்து குற்றங் குறைகளின் நீங்கி வாழும் குடிமக்களும் இல்லை. பிறரிடத்தினின்றும் தாம் மிகுதியாக வாங்கிக் கொண்டு பிறர்க்குக் குறைவாகக் கொடுக்கும் மாசுபட்ட மனத்தையுடைய கள்வர்களே வணிகர்களாக உள்ளனர். அழகிய ஒளிவீசும் ஞாயிறு இயங்குமுறை தவறினும் முறை பிறழாத நேர்மையான தீர்ப்பு வழங்கும் அற மன்றங்களும் தம் இயல்பினின்றுங் குன்றிவிட்டன. நாடகமும் பிறகலைகளும் தீய இயல்புடையன ஆகிவிட்டன. பொலிவுற மேம்பட்டு விளங்கும் கற்பிற் சிறந்த மகளிருங்கூட மனநிலை திரிந்து மனைக்குரிய ஆளுமையைக் கைவிட்டு ஒப்பனையால் செயற்கை முடியை அணிந்து கொள்வார் ஆயினர். பல்லாற்றானும் வலிமை வாய்ந்தவர்களே மேலும் வலிமை பெற்றுள்ளனர்; மெலிவுற்றவர் களோ மேலும் மெலிவுபட்டுள்ளனர். குலங்கள் பல்வேறு சாதிகளாகக் கிளைத்துப் பற்பல கலகங்களைச் செய்கின்றன. தமக்கு உற்ற துன்பத்தைப்பொறுத்துக் கொண்டு பிறர்படும் துன்பத்தைப் போக்கும் பொருட்டுக் குரல் கொடுப்போரும் செவ்விய நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவோருமான சான்றோர் பெருமக்களுக்குத் தக்க பாதுகாப்பு இல்லை. இத்தகைய சீர்கெட்ட நிலையினும் இழிந்த மகிழ்ச்சியின் பொருட்டு மனக் கருத்தை விற்று நல்ல இயல்புகள் அழியப் பெறுவோரும் தீவினைகளைச் செய்யக் கூசாதவர்களும் கைப்பொருள் ஒன்றையே பெரிதெனக் கொண்டு பேணிக் காக்கும் அறியாமை மிக்க வாழ்வுடையோருமாக இருக்கும் மக்கள் நிலையை எண்ணி யாம் வருந்துகின்றமையான் என்றவாறு.

விரிப்பு :

இப்பாடல் புறப்பொருள் பற்றியது.

நாட்டின் பல்வேறு இழிநிலைகளையும், மக்களின் சிறுமைப் போக்கையும் எண்ணித் தாம் வருந்தும் நிலையை வெளிப்படுத்திப் பாடியது இப்பாட்டு.

சாய்தலும் இல்லேம் .... என்குவீராயின் : நிற்றலும் இருத்தலும் ஆகிய நிலைகளை இயங்குவதற்கு ஏற்றவை யாதலின் இயக்கந் தவிர்தலைக் குறிக்கக் கிடக்கும் நிலையைக் கூறினார். சாய்தல்- படுத்தல்.

மனக் கவலையின் மெய்ப்பாடு கண்கசிதல் ஆகலின் நனைவிழி எனப்பட்டது. கவலையால் வெதும்பும் உள்ளம் அக் கவலையை

எந்நிலையிலும் மறத்தலாகாமையின் 'மாய்தல் யாண்டையும் இலம்' என்றார். மாய்தல் -மறத்தல்.

உள்ளமும் உடலும் அமைதிபெற வொட்டாது வருத்துதலின் தோய்துயர் என்றார். தோய்தல்-செறிதல்

குடிபுரந்து உவக்கும் கொற்றம்: அரசு குடிமக்களைப் புரத்தலாவது புறப்பகையான் வரும் போர்கள், அகப்பகையான் வரும் பூசல்கள், மற்றும் அதிகார முறைகேடுகள் இயற்கை ஊறுபாடுகள் முதலானவற்றை எதிர்கொண்டும் தடுத்து அடக்கியும் நெறிப் படுத்தியும் இழப்பீடு நல்கியும் பாதுகாத்து வாழ்வித்தல். அன்றியும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் செயன் முயற்சிகளுக்கும் ஊக்கமளித்து உதவிபுரிதலுமாம்.

மக்களை இனிது வாழ்வித்தலே அரசின் மெய்யான வெற்றியா கலின் அதனான் வரும் மனமகிழ்ச்சி உவகை எனப்பட்டது.

முடிபணிந்து உய்யுங் குடி : குடிமக்கள் அரசுக்கு அடங்கி நடத்தலாவது அரசு வகுக்கும் அறச் சட்டங்கள் செயற்படவும், நலத்திட்டங்கள் நிறைவேறவும் அவற்றைக் கடைப் பிடித்தும் ஒத்துழைத்தும் வாழ்தல். உய்தல்-குற்றங் குறைகள் நீங்குதல். செய்தக்க அல்ல செய்தல் குற்றமும் செய்தக்க செய்யாமை குறையுமாம். முடி-அரசு.

இனி, முடிபணிந்து உய்யுங் குடியாவது அரசும் பணிந்து உய்யுமாறு விளங்கும் தலைமை சான்ற குடிமக்கள் எனினுமாம்.

நிறையின் வாங்கிக் .... வணிகர்: நிறையின் என்பது குறையின் என்பதற்கு மறுதலையாகக் நிற்றலின் அளவின் மீறி மிகுதிப் பொருள் கொடுத்தது.

பேராசையான் நடுநிலை பிறழ்ந்து பிறரை ஏமாற்றிப் பொருள் குவிக்கும் குற்றவாளிகள் ஆதலின் இழிநிலை வணிகர்கள் கறை நெஞ்சத்துக் கள்வர் எனப்பட்டனர். ஈண்டுச் சுட்டப் பெறும் வணிகர் நிலை,

கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது

எனப் பட்டினப் பாலை குறிக்கும் வணிகர் நிலைக்குத் தலைமாறாதல் காண்க.

அஞ்சுடர் தவறினும்...........குன்றிய: முறை பிறழாத இயக்கத் துக்குக் கதிரவனை எடுத்துக் காட்டாகக் கூறுதல் வழக்காதலின்

'அஞ்சுடர்தவறினும் என்றார். இருள் நீக்கி அச்சந்தவிர்த்து எழுச்சியூட்டுதலின் கதிரவனை அஞ் சுடர் என்றார். செஞ்சொல் - நடுநிலையான தீர்ப்புரை.

கூத்தும் கலையும் தீத்திறம் பட்ட: நாடகக் கலை எல்லா நிலையினரையும் ஈர்க்கும் இயல்பு பற்றியும்--- பாடல், உரையாடல், இசை, கூத்து, நடனம், ஓவியம் ஒப்பனை முதலான பல்வகைக் கலைகளையும் உள்ளடக்கி நிற்றல் பற்றியும் 'கூத்துங் கலையும் என்ற விடத்துத் தனித்தெடுத்துச் சிறப்பித்து உரைக்கப்பட்டது.

கூத்து என்பது இசை தழுவிய ஆட்டத்தையும் நாட்டியம் என்பது இசைப்பாடல் தழுவிய மெய்ப்பாடு சான்ற நடனத்தையும் நாடகம் என்பது கதை தழுவிய நிகழ்ச்சியையும் சிறப்பாகக் குறிக்கும். குறிப்பினும் ஈண்டுக் கூத்து என்பது மேற்காட்டியவாறு கலை களினின்றும் தனித்து எடுத்துச் சிறப்பித்துரைக்கப்படுதலின் அது நாடகத்தையே குறித்தல் அறியப்படும். அன்றியும் அஃது இற்றை நிலையில் திரைப்படமாகவும் கொள்ளப்படும்.

பூத்து உயர் கற்பின் ...... பூண்டார்: கல்வி கேள்விகளினும் செல்வச் சிறப்பினும் எழில் நலங்கள் பிறவற்றினும் மேம்பட்டதாகவும் தெய்வத் தன்மையுடையதாகவும் போற்றப்படுதலின் கற்பு 'பூத்து உயர் கற்பு ' எனப்பட்டது. அஃது இளமகளிர்க்கே சிறப்புடைமை பற்றி 'கற்பின் மடவர்' என்றார். மடவர்-இளமகளிர் . அவர்தாமும் மனந் திரிந்து ஒப்பனையால் போலி முடியைப் புனைந்து கொள்ளும் நிலைக்கு இழிந்தனர் என்றார். புரைந்து --புரைபட்டு.

மகளிர் மனையாள், மனைவி, இல்லாள், இல்லத்தரசி என்றெல்லாம் சிறப்பிக்கப்படுதலின் 'மனை முடிகழற்றி' என்பதற்கு 'மனைக்குரிய ஆளுமையைக் கைவிட்டு ' என்றாம். அவ்வாறன்றி இயற்கையான முடியைக் கத்தரித்து விட்டு ' எனினுமாம். இவ்வாறே அழகு வேண்டி இயற்கையான பற்களைக் களைந்துவிட்டுப் பொய்ப்பல் கட்டிக் கொள்வாரும் பலர்.

வலியோர் வலிந்தார் மெலியோர் மெலிந்தார்: செல்வத்தானும் பிறவுடைமைகளானும் ஆளுமைநிலைகளானும் வலிமையுடையோரே தம் வலிவைப் பெருக்கிக் கொள்ளுதலும் அவற்றின் மெலிவுற்றோர் மேலும் மெலிவுறுதலும் வெளிப்படை.

குலம் பலவாகிக் கலாம் பல விளைத்த: நிலத்தானும் தொழி லானும் இயற்கையாய் ஒன்றி வாழ்ந்த மக்கட் குலங்கள் அயலவர் சூழ்ச்சியால் பிறப்பின் வந்தனவாகவும் உயர்வு தாழ்வு உடையனவா

கவும் திரிக்கப்பட்டும் பல்வேறு சாதிகளாகப் பிரிக்கப்பட்டும் ஒவ்வொன்றினும் எண்ணற்ற உட்பிரிவுகள் விரிக்கப்பட்டும் தமக்குள் பகைத்து நின்று கலகம் விளைத்தல் கண்கூடு.

தந்துயர் பொறைந்து........ ஏமும் இன்றே: தந்துயர் பொறைந்து 'உற்ற நோய் நோன்றல்' என்ற படி தமக்குற்ற துன்பத்தைப் பொருட் படுத்தாமல் பொறுத்துக் கொண்டு. 'தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர்' என்றான் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி.

பொறைந்து --பொறுத்துக் கொண்டு. பொறை என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர் பொறைந்து என்று எச்சமாகி வினை வடிவு கொண்டது. கரைதல் அழைத்துச் சொல்லுதல்.

நல்லனவெல்லாம் கடனெனக் கொண்டு ஒல்லும் வகை யெல்லாம் உயர்பணி செய்யும் சான்றோர் பெருமக்களும் அரம்பர் களின் தாக்குதலுக்கு ஆளாக நேர்தலானும் தம் நற்பணிகளுக்கு உதவியும் துணையும் இன்றி அவற்றைக் கடைகொட்கச் செய்தற்கு இடர்படநேர்தலானும் 'சான்றோர்க்கு ஏமமும் இன்றே' என்றார்.

புல்லென் உவகைக்கு ...... இரங்குகை யானே : இழிநிலை மகிழ்ச்சியின் பொருட்டு மாந்தர்க்குச் சிறந்த மனக்கருத்தை விலைப் படுத்தலும், தீவினைகளைக் செய்யக் கூசாமையும் அறக்கொடினவா கலின் அவற்றைச் செய்வார் நிலை ஆசிரியரை வருத்துவதாயிற்று.

'பொருளாட்சி போற்றாதார்க் கில்லை' என்றபடி வாழ்க்கைத் தேவையின் பொருட்டுப் பொருளும் போற்றத் தக்கதே யாயினும் அஃது ஒன்றனையே பெரிதெனப் போற்றித் தீவினைகளுக்கு இடமான அறியாமை இருளில் சிக்கி உழல்வோர் இரக்கத்துக்கு உரியராயினர்.

இரங்குகையானே சாய்தலும் இல்லேம் எனக் கூட்டுக !

இப்பாடல் பொதுவியல் திணையும், முதுமொழிக் காஞ்சி என்னுந் துறையுமாம்.

தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் - 300/-
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் - 200/-

தமிழ் ஆட்சி மொழி ஆகத் தலைமைச் செயலகமே தடை!

- முனைவர் மா. நன்னன் நேருரை

- நம்முடைய இயக்கங்களில் பார்ப்பனரை நுழையவிடக்கூடாது என்பதற்காகக் கட்டிய மின்சார வேலி – காப்பு அரண்தான் திராவிடம்!
- கல்வித் துறை இயக்குநர் யாருமே கல்வி யாளரோ, கல்வியியல் ஆராய்ச்சியாளரோ இல்லை. பணி மூப்புப் பதவியாளர்களே!

★ *தாங்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநராக இருந்த போது, தமிழ்மொழிக்கு ஆக்கமாகச் செய்ய முனைந்தத் திட்டங்கள். செயற் பாடுகள், அவற்றுக்கு அரசு, அரசியல் ஆதரவுகள், தடைகள், மாற்றங்கள் குறித்து கூறமுடியுமா?*

நான் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக இருந்தபோது ஆட்சி மொழி தமிழாக ஆக்குவதற்கு மேற்கொண்ட முதன்மையான திட்டம், மூவாண்டு முனைப்புத் திட்டம். காலவரையறை செய்து, 'இந்தக் காலவரையறைக்குள் இதனைச் செய்து முடித்தாக வேண்டும்' என்று நெருக்காவிட்டால் எந்த அரசுப் பணியாளரோ, அலுவலரோ தமிழில் எழுதமாட்டார்கள். நான் பொறுப்பு ஏற்பதற்கு முன்னால் கால் நூற்றாண்டாக இந்தத் துறை இருந்து வந்தது. சட்டமும் இருந்து வந்தது. ஆனாலும் தலைமைச் செயலகம் அதற்கடுத்தபடி முதன்மையான வருவாய் வாரியம், உயர்அறமன்றம் ஆகியவற்றில் தமிழ் வள்ர்ச்சித் துறையைச் சேர்ந்த யாரும் நுழையவே இல்லை. என் காலத்தில் இங்கெல்லாம் ஆட்சி மொழித் திட்டத்தைச் செயல்படுத்த ஏற்றமுறையில் அணுகினேன். இப்பொழுதுகூட (ஓய்வு பெற்று 15 ஆண்டுகள் ஆகியும்) ஆட்சிமொழித் திட்டத்தை அரசு நிறைவேற்ற நான் தமிழில் தொடுத்த வழக்கை ஏற்க மறுக்கிறார்கள். தமிழுக்காக ஒரு வழக்கு தமிழ்நாட்டின் உயர்அறமன்றத்தில் தொடுக்க வேண்டு மானால் ஆங்கிலத்தில்தான் எழுதித் தரவேண்டும். அப்படிப்பட்ட ஓர் அமைப்பிற்குள்ளேயே புகுந்து தமிழிலேயே செய்வதற்காக முயன்றேன்.

எந்த அரசுமே தமிழ்த்திட்டத்திற்குப் பகையாக இருந்ததில்லை. ஆட்சி மொழித்திட்டத்திற்கு முதல் எதிரி யார் என்றால் தலைமைச் செயலகத்தில் உள்ளவர்கள்தாம்.

சில அலுவலகங்களில் தமிழ்த் தட்டச்சுப் பொறியே இல்லை என்று சொன்னார்கள். ஆங்கில ஆட்சிச் சொற்களுக்கு ஈடான தமிழ்ச் சொற்களுக்கு அகரமுதலி இல்லை என்று சொன்னார்கள். அந்தத் துறை அலுவலகங்களில் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளைக் கொடுத்து விட்டு ஆங்கிலப் பொறிகளைப் பறிமுதல் செய்வது போல அவற்றை எடுத்துவிடச் செய்தேன்.

இங்குத் தலைமைச் செயலகத்தில் ஓர் அரசாணையை ஓர் உதவியாளர் அரைமணி நேரத்தில் தமிழில் உருவாக்காததால் கீழே உள்ள துறைகளில் பல நூறுபேர் பல நூறு மணி நேரத்தை மொழி பெயர்ப்பதிலும் தட்டச்சு செய்வதிலும் வீணாக்குகிறார்கள். சென்னை மாநகர்க் குடிநீரில் மருந்து போட வேண்டுமானால் மேல்நிலைத் தேக்கத் தொட்டியில் மருந்து போட்டால் போதும். எல்லா வீடுகளிலும் உள்ள தொட்டியிலே வாளியிலே மருந்து போட வேண்டியதில்லை. அதுபோல தலைமைச் செயலகம்தான் மேல்நிலைத் தொட்டி. அந்தத் தொட்டியில்தான் சரி செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன். அவர்கள் பல தடைகளைச் செய்தார்கள். அகரமுதலித் திட்டம் வெளியிடத் தடைகளைப் பிறப்பித்தார்கள். தமிழ்த் தட்டச்சுக்குத் தடை செய்தார்கள். அப்படிச் செய்தவர்களிலே பிற மொழியாளர்களும் உண்டு. தமிழர்களும் பலருண்டு என்பதை நான் மறைக்க விரும்பவில்லை.

★ ***பேராசிரியர்கள், மற்றும் அதிகாரிகளில் சிலர் பணியிலிருக்கிறவரை அரசின் நடவடிக்கைகள் மக்களுக்கு எதிராக இருந்தாலும் அப்பொழுது ஆள்வோருக்கு அரணாக இருந்து விட்டு ஓய்வு பெற்ற பின்பு அதனை எதிர்த்துப் போராடுவது என்பது பற்றி உங்கள் கருத்தென்ன?***

இதில், இரண்டு வகையினர் உண்டு. இரண்டு பேரையும் வகைப்படுத்தி நான் சொல்கிறேன். சிலபேர் அரசு நலத் திட்டங்களுக்கு உடன்பாடு இல்லாதவராக இருக்கலாம். ஆனால் அது நலத்திட்டம். அதனை அங்கே சொல்ல முடியாது. எனக்குக் கைந்நூல் (கதர்) அணிவதிலே உடன்பாடில்லை. ஆனால் நான் அரசு 'கதர் வாரிய' த்திற்குப் பொறுப்பில் இருந்திருந்தால் அந்தப் பணியைச் சரியாகவே செய்திருப்பேன்.இது ஒரு வகை.

இன்னொரு வகையினர் எதுவும் சொல்லாமல் இருந்துவிட்டு அதன் பயன்களையெல்லாம் பெறுவார்கள். பிறகு வெளியிலே வந்து

அதனை எதிர்த்துப் பேசி கீழறுப்பு வேலை செய்து அதனால் கிடைக்கிற ஊதியங்களைப் பெறுவார்கள். இவர்கள் போலிகள் ஏய்ப்பாளிகள், கயவர்கள். இவர்களை நான் கண்டிக்கிறேன்.

சிலர், பெரிய அறிவாளிகளைப் போல் காட்டிக் கொள் கிறார்கள். திரு. வேங்கடசுப்பிரமணியம் அவர்கள் தமிழைப்பற்றி கல்வி பற்றி எல்லாம் பேசுகிறார். இவர் பள்ளிக் கல்வியிலே இருந்த போதும், புதுவைப் பல்கலைக் கழகத்தில் இருந்தபோதும் தமிழுக்கு எதிர்ப்பான செயல்கள் எல்லாம் செய்தார். வெளியில் வந்த பிறகு இப்போது தமிழ்க்கல்வி பற்றிப் பேசுகிறார். குடியரசுத் தலைவராக இருந்த திரு. வெங்கடராமன் இப்போது ஏதோ தான் ஒரு புதிய ஆள் என்றெண்ணிப் பேசுகிறார். இவரே அமைச்சராக இருந்தபோது, குடியரசுத் தலைவராக இருந்தபோது என்ன செய்து கிழித்தார். இவர்கள்தாம் இந்த இரண்டாம் வகையினர்.

★ ***திராவிடம் என்ற கருத்துகளை எதிர்த்துப் பல புதிய கருத்துகள் தோன்றுகின்றனவே இது பற்றி தங்களின் கருத்து என்ன?***

தென்மொழி அன்பர்களுக்கு ஒரு கருத்தாகச் சொல்கிறேன் நீங்கள் இதற்காகக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யுங்கள். அந்தச் கருத்தரங்கிலே 'திராவிடத்தால் வீழ்ந்தோம்', 'திராவிடம்' என்பது மாயை என்று பல நூல்களை எழுதியவர்களையும் அழைத்து வாருங்கள். கருத்தரங்கு நடத்துவோம். இரு தரப்பினர் கருத்துகளைக் கேட்டு நூலாக்கி வெளியிடுவோம். எது சரி என்று படுகிறதோ அது இருக்கட்டும். நான் ஒரு திராவிட இயக்கத்தைச் சார்ந்தவன். இந்நிலையிலிருந்து என்னால் முடிந்தவரை விலகி நின்று விடை சொல்கிறேன்.

உங்களைத் திருப்பி சில வினாக்களை வினவுகிறேன். 'தமிழர்' -'தனித்தமிழ்' சார்பான உணர்ச்சிகளுக்குத் திராவிட இயக்கம் உதவி செய்ததா, ஊறு செய்ததா என்பது ஒரு வினா இரண்டாவது இந்தத் திராவிடம் என்ற சொல்லே, மருஉ மொழியா அல்லது பிற மொழியா. தேவை கருதி ஒரு சொல். அத் தேவையை நிறைவு செய்யும் சொல்லை இப்பொழுது ஏன் கைவிடவேண்டும்?

வரலாற்றில் இணைந்துவிட்ட அந்த இனப்போரை ஏன் கைவிட வேண்டும்? திராவிடம் என்பதால் தமிழ், தமிழன், தமிழ்நாடு கைவிடப்பட்டதாகக் கூறிவிடமுடியுமா? சில நண்பர்கள் இதனால் தீங்கு வந்து விட்டதாகச் சொல்கிறார்கள். ஒருவர் சொல்கிறார். "ஆரிய மாயை நம்மை அலைக் கழித்தது. திராவிட மாயை நம்மைத் திசை திருப்பியது" என்று அப்போது ஆரியமும் திராவிடமும் தமிழர்க்கு

பகையானவை என்பது அந்த நண்பரின் கருத்து. அதுவும் ஒரு மாயை என்று சொல்கின்றனர். பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த இராமமூர்த்தி உருவாக்கித் தந்தது. இந்தத் திராவிட மாயை. அதற்கு முன்னாலும் யாரும் எழுதியிருக்கக் கூடும். அதை இவர் பயன் படுத்துகிறார். இது இரண்டும் ஒன்று என்று இவர் கருதுகிறார். திராவிட உணர்வு அதாவது புரட்சிப் பாவலர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, பெரியார் ஈ.வெ.இரா. போன்றவர்களெல்லாம் அவர்களால் சொல்லப்பட்டனவெல்லாம் தமிழுக்கு எதிராகச் சொன்ன ஆரியமனு ஸ்மிருதி, வேதங்கள் , சாணக்கியருடைய அர்த்த சாத்திரம், இவற்றினுடைய கொள்கைகள், வருணாசிரம சாதி வேறுபாடு என்கிற ஆரியமும் அதை எதிர்த்த திராவிடமும் ஒன்று என்று இந்த நண்பர் கூறுகிறார். மேலும், "திராவிடம் பேசுவோர் நம் முதல் எதிரிகள்-மற்றவர்கள் அவர்களுக்குப் பின்னரே" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். மேலும்,

"நாயை வெட்டிக் கொடி முந்திரிக்கு எருவிடுவதைப் போல் அப் பொல்லாத் திராவிடத்தை, தமிழ்த் தேசியத்திற்கு எருவாக்கிப் போட்டுக் காப்போம்" என்று சொல்கிறார். இந்தக் கருத்துகளை வைத்து நினைத்துப் பார்த்தாலே 'இவர் யார்? இவர் உள்ளக் கிடக்கை என்ன?' என்று பளிச்செனத் தென்படுகிறது. ஏதோ ஓர் உள் நோக்கத்தோடு இவ்வளவு ஆண்டுகளாகக் கட்டி முடிக்கப்பட்ட கோபுரத்தை வீழ்த்துவதற்காக இந்தக் கருத்து சொல்லப்படுவதாகவே நான் நினைக்கிறேன். உண்மையிலே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழி பேசுபவர்களைக் குறிப்பிடும் கூட்டுச் சொல்.

ஆரியன் வருவதற்கு முன், நெம்புகோல் எப்படி விசைத்துறையில் ஓர் அடிப்படையைப் போட்டதோ அது போல் நீர்ப்பாசனத்துறையில் ஒரு பெரிய அடிப்படையில் உருவானது கல்லணை. அதைக் கட்டியவனோ தமிழன். பின்னால் அதுபோல் ஒருவரும் செய்யவில்லை. இராசராசன் போன்றோர் கோயில் கட்டினார்கள். அந்தப் பொறியியல் வீண் போகவில்லை. மடைமாற்றம் செய்யப்பட்டுவிட்டது. தமிழனின் அறிவு கோயில் கட்டுவதில் போய்விட்டது. வெறும் கல்லைப் பற்றாசு எதுவும் இல்லாமல் இசைவறிந்து அடுக்கி வைத்தான். எந்த வெள்ளமும் அதனை அசைக்க முடியவில்லை. அப்படிப்பட்ட அறிவை ஆரியம் வந்து வீழ்த்தி விட்டது. அந்த ஆரியத்தோடு இதனையும் இணைத்துப் பேசுகிறார்கள்.

'தமிழர்கள்' என்று நாம் சொல்லத் தொடங்கினால் இந்த ஆரியப் பார்ப்பனர்களெல்லாம் நாங்களும் தமிழர்கள் என்று

சொல்வார்கள். என்று பெரியார் சொல்லி மூன்று மாநிலங்களையும் சேர்த்துத் திராவிடம் என்று தொடங்கினார். நம்முடைய இயக்கங்களில் அவர்களை உள்ளே விடக்கூடாது என்பதற்காகக் கட்டிய மதில்தான்; அமைத்த மின்சார வேலிதான் திராவிடம். இவ்வியக்கத்தினுள் பார்ப்பனரை விட்டு இருந்தாரானால் இவ்வியக்கம் நிலைத்திருக்க முடியாது. இதுபோன்ற பலவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் திராவிடம் என்கிற அந்தக் காப்பு அரணைப் பெரியார் அமைத்தார். அது மொழித் துறையிலும் இருந்து வந்ததுதான். அது தமிழிலிருந்து திரிந்த சொல்தான். திரிந்த சொல்தானே தவிர பிறமொழிச் சொல் அன்று. ஆகவே, அதனைப் பகை என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. நம்முடைய முன்னோர்கள், நம்முடைய தலைவர்கள்-தோழர்கள்-நம்முடைய இனத்தைச் சேர்ந்த மக்கள்-செந்நீர் சிந்தி அரும்பாடுபட்டுக் கட்டிய கோட்டை அது. அந்தக் கோட்டையை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, இடிக்க வேண்டும் என்பது தீயது.

★ ***திராவிடர் கழகம் , திராவிட முன்னேற்றக் கழகம், இதன் இரண்டு மேடைகளிலும் பேசியிருக்கிறீர்கள். அக்கால், அரசியலில் ஏற்பட்ட கருத்து மாறுபாடுகளுக்காக அவற்றின் தலைமையிடம் பேசியிருக்கிறீர்களா? அது குறித்த செய்தி என்ன?***

ஒன்று திராவிடர் கழகம் அரசியல் கட்சி இல்லை. முழுக்க முழுக்கக் குமுகப் பணி, பகுத்தறிவுப் பணி செய்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் முழுக்க முழுக்க அரசியல். இரண்டுமே எனக்குத் தொடக்கக் காலத்திலிருந்தே தொடர்புண்டு. இரண்டு கட்சிக்கும் வேறுபாடு இருந்தாலும் கூடத் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறேன். கட்சியைப் பொறுத்தவரை வேறுபடு கருத்துகளைத் துணிந்து பரிமாறிக் கொள்கிற கட்சிகள்தாம் அவை. வெளியிலே பார்க்கிறவர்களுக்கு பல நேரங்களில் தோற்றம் வேறு மாதிரியாக இருக்கும். நானும் என் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். மாறுபாடு என்று கேட்கிறீர்கள் அவ்வாறு இல்லை. வேறுபாடு வந்ததுண்டு. உங்களைப் போன்று முழுக்கத் தனித் தமிழில் என்னால் பேசமுடியாது. ஆனால் அதனைப் பின்பற்றுவதில் உங்களைவிட நான் குறைந்தவன் அல்லன். இதில் முரண்பாடு இல்லை. வேறுபாடு உண்டு. அதுபோல் வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கக்கூடும். அதற்காக அவர்களிடம் கலந்து பேசியிருக்கிறேன். தேசிய முன்னணிக் காலத்தில் இரண்டு நாள்கள் கலந்து பேசப்பட்டன. அப்படி உருவாகிற கருத்துகள் தாம் ஆட்சி செய்கின்றன.

★ ***இன்றைய கல்வி முறை சரியானதா? இல்லையெனில் அவை எப்படி செயல்படுத்துதல் வேண்டும்?***

பொதுவாக கல்விமுறை இந்தக் காலத்திற்குச் சரியானதன்று. மெக்காலே அந்தக் காலத்திற்கேற்றவாறு அமைத்தான். அக்கால கல்வி என்றாலே வடமொழிதான். வேத சாத்திரங்கள்தான். கல்விக் கூடங்களிலே பார்ப்பனர்கள் மட்டும்தான் படிக்க முடியும். அதைப் பார்த்துவிட்டு இந்த நாட்டிலுள்ள தமிழர்களுக்கு வாய்ப்பில்லாமல் போகிறதே என்று திட்டத்தை மாற்றினான். தமிழ்நாட்டில் தமிழ் கற்றுத் தராத பள்ளிகளுக்கு அரசின் உதவி கிடையாது என்று சொன்னான்.

இப்பொழுது கல்வித்துறையிலே இருக்கிற கல்வியாளர்கள் - கல்லூரிக்கல்வி -பள்ளிக் கல்வி, அகவை வந்தோர் கல்வி, சட்டக்கல்வி, மருத்துவக் கல்வி, இந்த இயக்குநர்களுக்கெல்லாம் கல்வித் தகுதி என்ன? பணிமூப்பு அடிப்படையில் வருகின்றார்களே ஒழிய அறிவில்லை. இவர்கள் கல்வியைப் பற்றிச் செய்த ஆய்வுகள் என்னென்ன? அடிப்படையிலே கோளாறு இருக்கிறது. மற்ற துறையில் அப்படி இல்லை.

அதற்கு நான் சொல்லுகின்ற மாற்று, இரண்டு அமைப்புகள் தேவை எனக் கருதுகிறேன். ஒன்று கல்வி வாரியம். மற்றொன்று கற்போர் குறை களைவு ஆயம். கல்வித்துறையிலே ஆசிரியர் நன்கு கற்றுத் தராமையால் நல்ல மதிப்பெண் வாங்க முடியாத ஒரு மாணவர் வாழ்க்கையில் இழப்பு ஏற்படுகிறது. அதனால் பள்ளியிலிருந்து இழப்பீடு வேண்டுமென்று வழக்குத் தொடரலாம். மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகள் செத்துக் கொண்டிருக்கிறார்களே என்று கேட்டால் மருத்துவர் மறுமொழி சொல்லக் கடமைப்பட்டவர்போல், ஊரில் கொலை, கொள்ளைகளுக்குக் காவல் துறை கடமைப்பட்டது போல் கல்வித்துறையில் அப்படி ஒன்றுமில்லை. அதற்குத்தான் இந்த ஆயம்.

அடுத்து வாரியம். அதன் பணி என்னவென்றால் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் எத்தகைய பணியாளர்கள் எந்தெந்தத் துறைக்குத் தேவைப்படுவர் என்று சொல்ல வேண்டும். அதற்கு முன்னாலே அதில் ஒரு திட்டப்பிரிவு இருந்து எந்த வகையான அமைப்புகள் தமிழ் நாட்டில் 10 ஆண்டுகளுக்குப்பின் இருக்கலாம் என்று திட்டம் தீட்டித் தரவேண்டும். அதன் பின் அத் திட்டங்களுக்குப் பணியாளர்கள் எந்தெந்தக் தகுதியில் தேவைப்படுவர் என்று வரையறுத்து அதற்குப் பிறகு கல்வியாளர்கள் பாடத்திட்டம் போட்டுக் கொடுக்க வேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டு

நூல்கள் எழுதவேண்டும். அதைப் பத்தாண்டுகளுக்குப் பின் அலுவல் களுக்கு வரப்போகும் மாணவர்கள் இன்று கல்விக்கூடங்களில் பயிலச் செய்ய வேண்டும்.

இந்தக் கல்விமுறையை பொறுத்த அளவில் இந்த இரண்டும் தேவை என்று கருதுகிறேன்.

★ *பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் மொழி, இன நாட்டுக் கொள்கைகள் குறித்துத் தங்களின் கருத்து*

இதனைப் பலமுறை வெளிப்படுத்தியிருக்கிறேன். சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால் அவர் செய்த பணியை இன்றுகூட நிரப்ப முடியவில்லை. இனியும் நிரப்ப முடியுமா ? அவருடைய முயற்சிகளை எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டுமென்று உளமார விரும்புகிறேன். அவா உறுகிறேன். அதற்கென்றே அவர் இருந்தார். இன்றும் ஈடுசெய்ய முடியவில்லை என்பது ஒன்றே அவரின் தரத்தையும் திறத்தையும் காட்டும்.

★ *தமிழறிஞர்களும், தமிழ்ப்பேராசிரியர்களும் ஒன்றுபட்டு மொழிக்காப்பு, வளர்ப்புக்குப் பாடுபட முன்வருவதற்கு உள்ள தடைகள் யாவை? இத்தடைகளைத் தகர்ப்பதில் தங்கள் பங்களிப்பு எத்தகையது?*

நான் ஒரு கருத்தாளன். ஓர் அமைப்பை உருவாக்கவோ பாடுபடவோ முடியாது. எனவே என்னுடைய பங்களிப்பு கருத்துப் பரிமாற்றம்தான். தமிழ்நாட்டில் பலர் தமிழுக்கு, தமிழ்நாட்டிற்குத் தொண்டு செய்ய முன் வருகின்றனர். அவர்கள் நன்கு எண்ணு கின்றனர். சிந்திக்கின்றனர். ஏதாவது செய்ய வேண்டும் என்று கிளம்பி வருகின்றனர். அங்கு அவர்களுக்கு 'தான்' என்ற எண்ணமும் வருகிறது. அப்போது மற்றவர்களோடு சேராமல் தான் ஓர் இயக்கத்தை உருவாக்கினால்தான் தான் தலைவனாக இருக்க முடியும் என்று எண்ணுகின்றனர். இதைத்தவிர அனைவரும் செயல்திறம் உடைய புடம் போட்ட தங்கங்கள்தாம்.

இப்போதுள்ள நிலையில் ஆளுக்கொரு அமைப்பு. இதுபோன்ற நிலையைத் தவிர்க்க முடியவில்லை. ஆனால் ஒருங்கிணைப்பு செய்ய லாம். கூட்டமைப்பு ஏற்படுத்தலாம். சுழற்சி முறையில் பொறுப்புத் தலைமையை ஏற்படுத்தலாம். இப்போது நல்ல விழிப்புணர்வு உள்ளது. இதற்கு முன்புகூட இவ்வளவு இருந்ததில்லை.

இந்தப் பக்குவத்தில் இந்த உணர்வைப் பரிமாறி முன்னேற்றத் திற்கு உழைக்க தோள்மேல் கைபோட்டு அனைவரையும் முன்வர அழைக்கிறேன்.

செவ்வி : கி. குண்த்தொகையன், மா. பூங்குன்றன்

பாவலரேறு பொதுமையர் — குணா

சொந்த நிலம் இழந்தவரும் இல்லாதாரும், உலகரசு என்னும் சாக்கில், தன் இனநலம் காவாமல் பிறர் நலம் காப்பதாகச் சொல்லும் கயமையின் கோலத்தைப் புலப்படுத்தினார். குருடன் இன்னொரு குருடனுக்கு வழிகாட்ட முடியாததைப் போன்றதே அக்கோலமெனப் பாவலரேறு கடிந்தார். இதனால், உடுக்கை இழந்தவன் ஊருக்கெல்லாம் வேட்டியும் புடவையும் வாங்கித் தரப் போன கதையாய் உலகப் புரட்சியைப் பற்றிப் பேசி, உருசியா, சீனம் போன்ற ஒப்புரவு அரசுகளின் தேசிய நலன்களையும் நீட்டிப்புகளையுமே உலகநேயம் என நம்பிக் கெட்ட பொதுவுடைமையரின் வறட்டியத்தைப் போன்றதாகப் பெருஞ்சித்திரனார் அவர்கள் கண்ட பொதுமை இல்லை. தமிழ்மொழியோடும் தமிழ் மண்ணோடும் மரபோடும் உளப்பாடுகளோடும் இயைந்த இயற்கை நிலையில், தமிழியமான பொதுமை உணர்வே பெருஞ்சித்திரனார் அவர்களிடம் இயல்பாய்ப் பொதிந்திருந்த கருத்தியலாம். நிலனும் பொழுதும் (Space and time) திணைகள் பிழையாப் பொதுவுடைமை ஓர்மையே அதுவாகும். வேண்டா இரவலும் இறக்குமதியுமாக அப் பாவலனின் பொதுமையியம் இருந்ததில்லை.

தமிழ் வானில் அதோ ஒரு விடிவெள்ளி! வந்தேறிகளிடம் ஆயிரம் ஆண்டுகளாய் அடிமைப்பட்டு மண்ணிழந்து மதிப்பிழந்து, மொழி கெட்டு, விழி கெட்டு, கடலிழந்து, கரையிழந்து, கொடியிழந்து, கொற்றமிழந்து, அடிமை வாழ்வையே பேரின்பமென நம்பி உழன்றுவரும் தமிழரினம், இன்று ஒரு வழியாய் மறைந்த தென்புலமாம் குமரிக்கண்டத்தின் திசையை நோக்குகின்றது! பன்னூறு ஆண்டுகளாய்த் தமிழரினம் நோற்ற தவமே, தமிழீழத்தில் விடுதலைக் களமாடும் எல்லாளனைத் தோற்றுவித்துள்ளது போலும். அவன் என்ன, சொந்த வரலாறு அறியாது, ஐரோப்பிய வரலாறுகளையும் மார்க்சியத்தையும் கரைத்துக் குடித்துவிட்டு 'உருசியாவைப் பார்' சீனத்தைப் பார்! என வாய்ப்பந்தலிட்டவனா? புரியாதவற்றைப் புரிந்து கொள்ளாமலேயே, புரியாத வகையில் புரிந்து கொள்ளாமலேயே பேசக் கற்றவனா? இல்லையே! ஆனால் அவனல்லனோ இன்று தமிழரின் வீரத்திற்கும் விடுதலைக்கும் இலக்கணமாகிவிட்டான்? அவன் எங்குப் படித்தான்? என்ன கற்றான்? யாரிடம் பயின்றான்? அந்த எல்லாளன் சொன்னான்:

''இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது மெய்யியல் ஆசான்; வரலாறு எனது வழிகாட்டி.'

அதே பல்கலைக்கழகத்தின் முதுநிலை மாணவர் தாமே பெருஞ்சித்திரனார் அவர்கள் ? அதனால் அவரது பொதுமை ஓர்மையில் மண்வாசம் உண்டு; தமிழியம் உண்டு. பெருஞ்சித்திரனார் அவர்கள்

பொதுமை அறிவு, தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ்நிலத்திற்கும் தமிழர் இனநலன்களுக்கும் இரண்டகம் செய்யவில்லை. மாறாக, தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ்நிலத்திற்கும் என உழைத்தே தேய்ந்தன அவரது மெய்யும் உயிரும்.

தமிழின் வேரைத் தேடுவதையே வாழ்க்கையாகக் கொண்டார், பாவாணர். அப் பாவாணரை இயக்கமாக்கியவர் பெருஞ்சித்திரனார். இவர்களைத் தமிழகப் பொதுவுடைமையரின் அணிவகுப்புகள் ஏற்றுக் கொள்ளவில்லை. பார்ப்பனரும் பொதுவுடைமையரும் அவர்கள் பேணிப் புரந்த தனித்தமிழைத் தங்களின் பெரிய பகையெனக் கருதியே இயங்கினர். ஆயினும், தனித்தமிழ் அணியினர் பொதுவுடைமையை எதிர்த்ததில்லை. தமிழையும் தமிழர் நலன்களையும் தமிழரின் மண்ணுரிமையையும் தமிழகப் பொதுவுடைமையர் கண்மூடித்தனமாக எதிர்த்துவந்தமைக்கு, அவர்கள் சுமக்கமுடியாமல் சுமந்துகொண்டிருந்த தமிழரல்லா வந்தேறித் தலைமைகளும் நலன்களும், ஆரியப் பார்ப்பனியக் கருத்தியல் சார்பும், பெரிய காரணங்களாகும். பார்ப்பனரும் வந்தேறிகளும் இட்ட ஆணைகளுக்கு அடிபணிந்து நின்ற பொதுவுடைமைக் கட்சிகளின் அடிமட்ட ஊழியர்கள், 1968-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அப் பார்ப்பனியத் தலைமைகளையும், அவற்றோடு ஒன்றியும் முரணியும் நின்ற சிவனிய வேளாளரின் புதிய பார்ப்பனிய மேட்டிமையையும், தூக்கியெறியத் துணிந்தனர். ஆயினும், அவர்கள் கட்டிய 'புரட்சிக்' குழுக்களில் வந்தேறி நலன்கள் கோலோச்சுவதால், அவர்களாலும் வறட்டியத்திலிருந்து விடுபடமுடியவில்லை. அத்தகைய 'புரட்சி' களும் பெருஞ்சித்திரனார் அவர்கள் பேணிய தமிழ்த் தேசிய ஓர்மையையும், ஈழத்து எல்லாளன் நடத்தும் படையையும்"பாசிஸ்ட்'! பாசிஸ்ட்! " எனத் தூற்றி எதிர்க்காற்றில் எச்சில் துப்புவதை நிறுத்தினாரில்லை. அவ்வாறு செய்யாமை வந்தேறி நலன்களுக்கு அழகன்று. அஃது இயற்கை, ஆயினும், அந்த அணியிலிருந்த சிலர் மனம் மாறி, பெருஞ்சித்திரனார் அவர்கள், அவரது இறுதி நாளில் தங்கள்தம் பக்கம் வந்துவிட்டதாகக் கூறிக் கொள்கின்றனர்.

இந்நிலையில், ஓர் ஆங்கிலப் பழமொழி நினைவுக்கு வருகின்றது. 'முகமது அழைக்க மலை அவரிடம் வரவில்லையெனில், மலையை நோக்கி முகமது போக வேண்டும், என்பதே அதன் பொருளாகும். தமிழ் மாமலையாம் பெருஞ்சித்திரனார் அவர்களை தம் வழிக்கு– மண்ணை மறந்த வறட்டியத்திற்குக்--கொண்டுவர இயலாமல் போன இப் பொதுவுடைமையர் அணியில் ஒரு கூறுதான், அம் மாமலையை நோக்கிச் சென்றதே ஒழிய அந்த மலை அவர்களிடம் செல்லவில்லை. இருப்பினும், இவர்கள் ஒருவாறு தனித்தமிழையும் தமிழ்த் தேசியத்தையும் ஏற்றனர். இங்கு வென்றவர் பெருஞ்சித்திரனார் அவர்கள்

தாம்! வென்றது தனித்தமிழ்தான்! வாகை சூடியது தமிழ்த் தேசியம் தான்!

ஆரிய இனவெறிக் கோணத்தில் வலங்கைப் பொதுவுடைமையரின் அனைத்திந்தி(ய)ப் பெருந்தலைவராயிருந்த எசு.ஏடாங்கே ''தொல்பொது வுடைமையிலிருந்து அடிமையுடைமை வரையிலான'' இந்தியா என்னும் நூலை எழுதினார். இந்திய வரலாறு என்பதே ஆரியருடைய வரலாறே But the early history of India as known today is a history mainly of the Aryan tribes and people whose story later on became the history of India as a country") என அந் நூலில் அவர் புளுகியிருந்தார்.

இந்தப் பெரும் பொய்யையே திருமறையெனக் கொண்டு அதைத் தலைமேல் சுமந்து திரிந்தனர் தமிழகப் பொதுமையர். இந்தக் கயமையைத் தோலுரித்துக் காட்டிய ஓ........ஓ...... பொதுவுடைமைத் தோழனே! என்ற தென்மொழிக் கட்டுரை, அந்த ஆரியப் பார்ப்பனியப் புரட்டைச் சந்தி சிரிக்க வைத்தது. வரலாற்றியல் என்பது ஒரு கருத்தியலின் கடைக்காலாகும். சரியான வரலாற்றியல் பார்வை இல்லாத இயக்கங்கள் தோற்கும்; நிலைக்காது. இதைக் கருதியே, அத் தென்மொழிக் கட்டுரை,

"மார்க்சும் ஏங்கெல்சும் மீண்டும் ஒரு முறை இங்குப் பிறந்து வரினும் அவர் முதலில் பாவாணரிடம் பாடம் கேட்ட பிறகே இந்திய வரலாற்றுக்குள் நுழையவேண்டும். எனச் செம்மாந்து உரைத்தது. பாவாணரின் குமரிக்கண்டக் கோட்பாடு ஒரு செப்பமான, செறிவான வரலாற்றியல். அத்துடன், அவருடைய சொல்லியல் ஆய்வு காட்டும் மொழி மாந்தவியல் (Linguistic anthropology) சேர, அதுவே ஒரு சிறந்த வரலாற்று முறையியல் (methodology) ஆகும். அந்த வரலாற்றுப் பொருண்மையிய விளக்கத்தைத் தழுவி இருந்தமையே பெருஞ்சித்திரனார் அவர்களின் பொதுமை ஓர்மையின் உள்ளாற்றல ாகும். தமிழகப் பொதுவுடைமை இயக்கம் ஒட்டுமொத்தத்தில் தமிழுக்கும் தமிழரினத்திற்கும் பகையாகி நின்ற இயக்கமாயினும், பொதுவுடைமைக் கருத்தியலைப் பெருஞ்சித்திரனார் அவர்கள் போற்றினார். ஆனால், அவர் கண்ட பொதுவுடைமைக் கொள்கை தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்திய பொதுவுடைமையாகும். அதைப்பற்றி அவரே சொல்லக் கேட்போம்.

"இனி, இயற்கையாக ஏற்படும் இவ்வெழுச்சியையும் அதன் அடிப்படையாக உருவாகும் இக் கொள்கையையும் ஒரு நாட்டிலுள்ள மாந்த இனத்தின் இயல்பான மாற்ற விளைவுகள், குமுகாயத் திருப்புமுனைகள் என்று கருதாமல், வேறு எந்த நாட்டிலிருந்தோ இறக்குமதி செய்யப் பெற்றவை போலும், இக்கொள்கைக்கான ஆட்ட

இயக்குநர்கள்- அல்லது தலைவர்கள் - வேறு எந்த நாட்டாரோ எனக் கருதும்படி நடப்பதும், தங்களை அவர்களுக்கும் அவர்கள் நாட்டிற்கும் முகவர்களாக அல்லது கொள்கைக் கங்காணிகளாக அல்லது அரசியல் அடிமைகளாகக் கருதிக் கொண்டு, இங்குள்ள ஒரு சிலர் இங்குள்ள மக்களின் தன்மானத்தையும் உரிமையையும் அடகு வைப்பதும் அல்லது விலைபோக்குவதும் அல்லது எருவாகப் பயன்படுத்திக் கொள்வதும், அறியாமையும் அடாவடித்தனமும், இனக் காட்டிக்கொடுப்பும் ஆகும் என்பதை மிகவும் அடக்கத்தோடு எண்ணிப் பார்க்கவேண்டிக் கொள்கின்றேன்.

"ஒரு நாட்டின் எழுச்சியுணர்வுகளும் அடக்கவமைதிகளும் அந்நாட்டிற்கே உரியவன்றிப் பிற நாட்டினின்று இறக்குமதி செய்யப் பெற்றனவாகக் கருதக்கூடாது. மார்க்சுக் கொள்கை மட்டுந்தான் பொதுவுடைமைக்கு வழி கோலிற்று என்று நாம் கருதிவிடக்கூடாது. அந்தந்த நாட்டின் பழைய வரலாறுகளிலும், குறிப்பாகத் தமிழக வரலாற்றிலும், அக்கொள்கையின் மூட்டம் இருக்கத்தான் இருந்திருக் கின்றது. இப்படிக் கூறுவதால் மார்க்சின் பொதுவுடைமை அமைப்புக்கு மாசு கற்பிப்பதாகக் கூறக்கூடாது. அவரைப் பற்றி இங்கிருக்கும் பொதுவுடைமையரைவிட என் பாராட்டும் மதிப்பும் எள்ளளவும் குறைந்தவல்ல; கூடியனவாகவே இருக்கும் என்று பெருமையுடன் கூறிக் கொள்வேன். ஆனால் நான் கூறுவதெல்லாம் ஒரு நாட்டின் மக்களமைப்பு, பண்பாட்டு ஒழுங்குமுறைகள், மொழி, இன வரலாறுகள், வேளாண்மை, தொழிலாண்மை முதலியவற்றின் அடிப்படையில்தான் அந்தந்த நாட்டின் பொதுவுடைமைக் கொள்கை கள் அமைக்கப் பெறுதல் வேண்டும் என்பதுதான் என்பதைப் பொதுவாக இந்தியர்க்கும், குறிப்பாக இத் தமிழக மக்களுக்கும், கூறிக் கொள்ள விரும்புகின்றேன். பொதுவுடைமை இயக்கத்திற்கு உருவமைத்துக் கொடுத்த மார்க்சின் கருத்தும் அதுவே.

நமக்கு வேண்டிய ஓர் அரசியல் அல்லது பொருளியல் அல்லது குமுகாயவியல் சார்ந்த கொள்கையை நாம் புதிதாக உருவாக்கிக் கொள்ள வேண்டியிருந்தாலும் சரி, அல்லது திரித்தியமைத்துக் கொள்ள வேண்டியிருந்தாலும் சரி, அது நமக்கு பொருந்தின அளவில் தான் அமைதல் வேண்டும். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்தல் கொள்கைக்கும் பொருந்தாது; செயலுக்கும் பொருந்தாது; அறிவுக்கும் பொருந்தாது. எனவே எவ்வளவு உயர்ந்த வெளிநாட்டுத் துணியாகவிருந்தாலும், அதனை நம் பரும உயரங்களுக்குத் தக்கவாறு வெட்டி அளவெடுத்து நமக்குப்பொருந்திய முறையில்தான் நம் கொள்கை உடையைத் தைத்துக் கொள்ளலாமே தவிர, வேறொரு நாட்டிற்கு அதன் அரசியல், பொருளியல், குமுகாயவியல், வெப்ப

தட்ப நிலைகளுக்கேற்பத் தைக்கப்பெற்ற ஆடை நமக்குப் பொருந்தாது என்பதை அறிவினார் எண்ணி ஏற்றுக் கொள்ள வேண்டிக் கொள்கின்றேன்."

அதை மேலும் விரித்துரைக்கின்ற பாவலரேறு,

"எத்தகைய சிறந்த விதையானாலும் அதை ஊன்றுகின்ற நிலத்தையும் முறையையும் பொறுத்ததே அதன் விளைவு. பொது வுடைமைக் கொள்கை சிறந்ததுதான். ஆனால் அதனை ஊன்றுகின்ற முறைதான் இந் நாட்டில் சரியாகக் கடைபிடிக்கப்படுவதில்லை. அக் கொள்கையை ஊன்றவே இவ்வளவு காலம் பிடிப்பதும், ஊன்றிய விடத்தும் ஆட்ட அசைவுகள் ஏற்படுவதால் நன்கு வளராமலிருப்பதும், அக் கொள்கையின் விளைவாக்க முறைகளின் தோல்வியைத்தான் குறிக்கும். இத் தோல்வியை அவர்கள் ஒப்புக் கொள்வார்களானால் அதனை வெற்றியாக்கும் சில முறைகளிலும் அவர்கள் கருத்துச் செலுத்தியாகல் வேண்டும்."

"அதற்கு அவர்கள் முன் வருவார்களானால், முதலில் பொதுவுடைமை என்பது ஒரு நாட்டின் தனியுடைமை, அஃதாவது ஒரு நாட்டிற்கே மட்டும் உரிய கொள்கை அன்று என்பதையும் ஒரு நாட்டினால் மட்டுந்தான் அக்கொள்கைக்குத் தலைமை ஏற்க முடியும் என்பது சரியன்று என்பதையும், அந்தந்த நாட்டிற்கும் பொருந்துமாறு அக்கொள்கையை உருவாக்கம் செய்துகொள்ள முடியும் என்பதையும் அவ்வியக்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

"இரண்டாவதாகப் பொதுவுடைமை என்பது மக்களின் உணர்ச்சியைப் பொறுத்தும் பண்பாடுகளை யொட்டியும் அமைக்கப் படவேண்டிய கொள்கையாகலின், பொதுவுடைமைக்காரர்கள் தமிழக மக்களிடையே இக் கொள்கையைப் பரப்ப விரும்புவார்களாயின், இத் தமிழக மக்களின் மொழியுணர்ச்சிக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் மதிப்பளித்தே யாகல் வேண்டும். மொழி, இனம் போன்றவை குறுகிய கொள்கைகள் என்பது அவர்களின் கருத்தானால், பொது வுடைமையை மேற்கொள்ளும் இயற்கை யுணர்விற்கும் அதனைச் செயற்படுத்தும் விளைவாக்க முனைப்பிற்குமே அவர்கள் மாறுபட்டவர்கள், தகுதியற்றவர்கள் என்று கருதிக் கொள்ளுதல் வேண்டும்.

"மூன்றாவதும் முடிவானதுமான ஒருண்மையை அவர்களின் பொருட்டும் இந்நாட்டு மக்களின் பொருட்டும் கூறி இவ்வுரையை முடித்துக் கொள்வதே சால்பாகும் என்று நினைக்கின்றேன். நான்

மேற்கூறிய இரண்டு வழிகளையும் கடைப்பிடித்து அவற்றிற்குத் தகுந்த வழியில் பொதுவுடைமைக் கொள்கை இங்கு நிலைநாட்டப் பெறவில்லையானால், அறிவுக்கும், இயற்கைக்கும், மாந்த உணர்விற்கும் பொருந்திய வழி மொழியையும் இனத்தையும் பண்பாட்டையும் அடியொட்டியவாறு ஒரு பொதுமைக் குமுகாயம் இங்கு உருவாகி வருமென்றும், அவ்வாறு அக் குமுகாயம் தலையெடுக்குங்கால், இவர்கள் பேசும் இக்காலப் பொதுவுடைமைக் கொள்கை பொருளற்றதாகவும் தேவையற்றதாகவும் போய்விடலாம் என்றும், அக்கொள்கை வலுப்பெற வலுப்பெற அமைதி தவழும் ஓர் உயர்ந்த புதுமை உலகம் உருவாகும் என்றும் அவர்கள் உணர்ந்து கொள்வார்களாக" என்று சொன்னார்.

தமிழகப் பொதுவுடைமையரைப் பற்றிய இந்த அலசல் மிகச் சரியானது. பிற நாட்டிலிருந்து வரும் எந்தவொரு அயல்புலக் கொள்கையையும் மென்று தின்று அசை போட்டுச் செரித்துப் பின்னர் கழிப்பதைக் கழித்தே ஆக வேண்டுமென அதையே சீனத்து மாசேதுங் நயம்படச் சொல்வார். உணவு ஒரு புறப் பொருள். அதை உண்டபின் அது செரித்துத் தன்வயமாக்கிக் கொள்ளப்படுகையில், அவ்வுணவு உடம்போடு ஒட்டுகின்றது. உணவாகிய அப் புறப்பொருள் உடம்போடு ஒட்டாமல் போனால், அவ்வுணவே உடம்புக்கு நஞ்சாகும் அது உயிரையே கொல்லலாம். உண்டு செரித்தபின் கழிப்பது என்று ஒன்று உள்ளது. அவ்வாறு கழிக்காது போனால், மெய்க்கே கேடாகும். இவ்வாறுதானே மாசேதுங் பாடம் படித்தார்? அந்த இயற்கையியட் பொதுமை விளக்கத்தையே பெருஞ்சித்திரனார் அவர்களும் இயல்பாகவே சொல்லி வந்தார். **(தொடரும்)**

வெளிவந்துவிட்டன

பாவலரேறு ஐயா அவர்களின் நூல்கள்

		விலை
1. **நமக்குள் நாம் (மறுபதிப்பு)**		1.00
2. **சாதித்தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும் (மறுபதிப்பு)**		3.00
3. **ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் (மறுபதிப்பு)**		7.00
4. **இளமை விடியல்** (தமிழ்ச்சிட்டில் வெளிவந்த ஐயா அவர்களின் - ஆசிரியவுரை கருத்துக் கருவூலம்)		50.00

காட்சியும் உணர்வும்!

– செந்தாழை ஆறிறைவன்

என்னுடைய தங்கல் (தமிழகத்தில்) 1995 ஆகத்து 18 வரை என்பதனாலும், எனக்குக் குறிப்பாக வேறெந்தப் பணியும் அழுத்திக் கொண்டிருக்கவில்லை என்பதினாலும், எல்லாவற்றிற்கும் மேலாக என் உள்ளத்தில் "செந்து! இவற்றையெல்லாம் கணக்கு எடுத்துவிட்டு ஊர் செல்லம்மா" என்று என் தந்தையின் குரல் 20 ஆண்டுகளுக்கு முன் ஒலித்தது போலவே என் நெஞ்சினுள் ஒரு குரல் ஒலித்துக் கொண்டிருந்ததை உணர்ந்தேன். அப்பா, நான் அங்கு வீட்டில் இருந்திருந்த காலத்தில், இது போன்ற பணிகளுக்கு, 'செந்து!' என்றுதான். அவர் திருவாயினின்று கூவி அழைப்பார். அத்தகைய கூப்பாடு தொடங்கும்போதே அவர் முன் சென்று நிற்க வேண்டும்.

இப்போதும் அப்பா அறைக்குள்ளே தான் இருக்கிறார்கள் இதுவெல்லாம் நம் பணி! அப்பா அழைத்தாலும் அழைக்கா விட்டாலும் நாம்தான் போய்ச் செய்ய வேண்டும் என்ற ஒரு துன்ப அழுத்தத்தின் அடிப்படையில் நம் கடமை என்ற பெயரில் நான் குழந்தை முதலாய் என் இரு கண்களிலும் நோக்கிய என் அப்பாவின் மேல் கொண்ட என்னுடைய தனிப்பட்ட அன்பு முழுவதையும் அப்படியே அப்பணியில் கொட்டி, தனியாகவே அறைமுழுவதின் இருப்புக் கணக்குகளையும் ஊர்திரும்பிச் செல்வதற்குமுன் செய்து முடிக்க கண்ணீருடன் உள்ள உறுதிபூண்டேன்.

என் அப்பாவை என் நெஞ்சில் ஏந்திக் கொண்டு பணியைத் தொடர வேண்டி அறைக்குள்ளே காலடி வைத்தேன். அப்படியே ஒரு சிலிர்ப்பு! அட....தரையில் அப்பாவின் உணர்ச்சி நரம்புகள் ஓடவிடப் பட்டிருக்கின்றனவே! அப்படியே அந்த பச்சைப் பேழையைத் தொடுகிறேன். ஆ.... அதிலும் அதே உணர்வு! சிலிர்ப்பு! இப்போது எதையும் தொடவில்லை. அப்படியே நின்று எல்லாவற்றையும் சுற்றி அமைதியாக நோட்டம் விட்டேன். எல்லாமும் என்னைப் பார்த்தன. ஏதேதோ பேசின. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

பாவலரேறு ஐயா அவர்களின் இல்லத்தில் அவரது அறையில் இருந்த பொருள்களை இருப்புக் கணக்கெடுக்கும் பொறுப்பு குடும்பத்தவரால் திருவாட்டி. செந்தாழையிடம் ஒப்படைக்கப் பெற்றது. அவர் அப்பணியை மேற்கொண்ட போது தமக்கேற்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

–ஆசிரியர்.

அப்பா அந்த அறையில் அந்த சுழல்நாற்காலியில் அமர்ந்து கொண்டு என்னிடம் பேசியிருந்தபோது, அந்தப் பேழைகளோ, மிசையோ என்னிடம் பேசியதே இல்லை. அவை மிசையாக, பேழைகளாக, வெறும் பொருள்களாகத்தான் காட்சியளித்திருந்தன. ஆனால்..... இப்போது..... ஆ.......ஏதோ புதிய உணர்வுகள் ! எல்லாமும் உயிர்பெற்று அசைவது போலவே எனக்குத் தெரிகிறது! அப்பாவின் பைகள், குடை, மிசைப் பொருள்கள், விளக்குகள், யானை, புத்தர்... எல்லாமும் உயிருடன் என்னைப் பார்க்கின்றன. நான் எதற்காக அந்த அறையில் நுழைந்தேன் என்பதையே மறக்கிறேன்.

அப்படியே அந் நாற்காலியில் உட்காருகிறேன்.. அப்பாவின் மடியில் அமர்ந்த நினைவு வந்து சூழ்கிறது. அந்தப் படுக்கையில் அமர்கிறேன். அதே தந்தைமை உணர்வு என்னைத் தொடுகிறது! இப்போது எல்லாவற்றையும் தொடுகிறேன். கை, கால் என்று அப்பாவின் உடல் உறுப்புகளாய் என்னை உணரவைக்கின்றன. அத்தனைப் பொருட்களும்! ஒரு வகையான வெப்பம் குளிர் இரண்டும் சேர்ந்து ஏற்பான ஒரு தூய காற்று மண்டிலத்திற்குள் இருப்பது போன்ற உணர்வை உணர்கிறேன். அதே போல், எந்த வெளிச்சத்தமும் என் செவிக்குள் செல்லவில்லை. ஓ....ஓ.... இவ்வளவு ஆற்றல் எங்கிருந்து வந்தது? எப்படி என் செவியை அடைத்தது? எனக்கு ஒன்றும் கேட்கவில்லை... ஆனால் பொருள்கள் என்னுடன் ஏதோ உயிர்த்தொடர்பு கொண்டது போல், என்னிடம் பேசுவது போல் உணர்கிறேன். அன்று இதற்குமேல் என் எண்ணங்களைச் சிதறவிடாது, அதே உணர்வுடன் வெளியே (பணியைத் தொடங்காமலே) வந்தேன்

அதற்கு மறுநாளும் பணியைத் தொடங்கவில்லை. உள்ளே சென்றாலே நான் வேறு உலகத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறேன் என்பதால், கொஞ்ச நாட்கள் செல்லாமலே இருந்தேன். எங்ஙனம் அத்தனையையும் இருப்புக் கணக்கு எடுப்பேனோ! இன்னும் என்னென்ன உணர்வுகள் என்னைத் தடை செய்யப் போகின்றனவோ என்ற கடமையுணர்வு, அன்புணர்வுடனும் அறிவுணர்வுடனும் மோதிக் கொண்டே நாட்கள் சில கடந்தன. தம்பியின் பொறுப்பு வினாக்கள் என்னைத் திரும்பவும் கடமைக்குள் இறங்க வைத்தன. பேழைத் திறப்புகளை அம்மாவிடம் பெற்று மீண்டு தனியே உள்ளே சென்றேன்.

முதலில் அந்தப் பச்சைப் பேழையைத் திறந்தேன் டரு...க்கு அஆ... இந்தப் பேழையை அப்பா எத்தனை ஆயிரம் முறை திறந்து இப்படி ஒலியிட்டிருக்கின்றன. இப்போது இந்த ஒலி கொஞ்சம் சினம் காட்டுவது போல் உணர்கிறேன். அப்பா கைப்பட்டுத் திறக்கும் அந்த கைவிரல்களின் பதிவு அடையாளங்களையெல்லாம் தேடினேன். முகர்ந்துப் பார்த்தேன். அப்பாவின் கை மணந்தது! அப்படியே அந்தந்த இடங்களில் என் முகத்தைப் பதித்தேன். சூடாக விழுந்த

கண்ணீரை அவ்வப்போது துடைத்துக் கொண்டேன். அந்தக் கண்ணீர், அப்பாவின் உணர்வுகளைத் தாங்கி வந்த கண்ணீர் துளியாகையால் விலையுயர்ந்த முத்துகளாய் எனக்குத் தெரிந்தன.. மேலும், பேழையின் கதவை மெல்லத் திறந்து பார்த்தேன்.. இப்படியெல்லாம் முழுமையாக என்றைக்கும் பேழையடுக்குகளை நான் என் முழுக்கண்களால் விழுங்கியதே இல்லை..... திறப்பதற்கு முன்னாலேயே "அந்த இரண்டாவது அடுக்கு நடுப்பகுதியில் உள்ள 'அந்த' நூலை எடும்மா!" என்றுதான் கூறியிருக்கிறார்.பேழையைத் திறப்பதற்கு முன் என் கண்விழிகளை ஏறக்குறைய இரண்டாவது அடுக்கு இருக்கும் இடத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறேன். திறந்த உடனே இருக்கிறதா? அட என்னம்மா நீ ! இருக்கிறதா, இருக்கிறதா?' என்று ஒரு பக்கம் செவியில் விழுந்து கொண்டேயிருக்க, நடுங்கிய விரல்களுடன் விரல்கள் கண்டு தொடுவதற்கு முன்னால், கண்கள் காணுவதற்கு முன் 'கண்டேன்' என்று சொல்வதற்கு வாயில் சொற்களை அணியப்படுத்தி, சொற்களை நாக்கின்மீது வைத்துக் கொண்டிருப்பதை ஐயாவின் கண்கள் பார்த்துக் கொண்டே, அவர் திருவாயில் "கண்டுபிடித்துவிட்டாயா, கண்டுபிடித்துவிட்டாயா?" என்று கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் சொல்கின்ற அதே சொற்களை, அதாவது கண்டுபிடித்து என்பதைத் தொடர்ந்து 'விட்டேன்' என்று நான் முடிக்க, அவர் 'அப்பாடா' என்ற பெருமூச்சு விடுவதைக் கேட்டு என் உண்மையான பெருமூச்சு உள்ளுக்குள்ளே ஓடிவிடும்.

இப்போது முழுப் பேழைக்குள்ளேயும் நோட்டம் விட்டேன். ஆயிரக்கணக்கான எண்ணக்குவியல்களாய் அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்ற நூல்களையும், தமக்கென்று ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்த சில நொறுவைப் பொருள்களடங்கிய புட்டில்களையும், இருமல்,சளி, போன்றவைக்கான மருந்துக் குடிப்புகளையும், காசுப் பெட்டி (சிங்கையிலிருந்து கொணர்ந்தது) மின் பொருள்கள் சில..... இவற்றையெல்லாம் ஒரே சமயத்தில் நெடுநேரம் நின்று தொடாமலேயே பார்க்கிறேன்.

பிறகு பேழையினுள் உள்ளே உள்ள தனிப் பேழையைத் திறக்கிறேன். ஒரு வெள்ளை வெளிநாட்டு ஞெகிழி உறை மூட்டை! ஆ—இது—சென்ற முறை (1994 மே.) நான் வந்திருந்தபோது —ஆ—சென்ற மாதம் (1995 மே) தொலைபேசியில் இது பற்றிக் கூடக் கொஞ்சம் வெளியே எடுத்துப் பார்ப்போம். ஆ—ஓ— எவ்வளவு இறுக்கமாக உள்ளே அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. எப்படி உள்ளே நுழைத்தார்? கடினப்பட்டுப் பல இடிபாடுகளுடன் வெளியே உருவி எடுக்கிறேன். திறந்து பார்க்கிறேன். அப்படியே நெஞ்சம் ஓட்டமின்றி ஒரு கணம் நிற்கிறது. ஏதோ பெரிய இரும்புக் கவசம் நெஞ்சில் போடப்படுகிறது!

சென்ற ஆண்டு வந்திருந்தபோது சிறுசிறு தூவல்கள், அழிப்பான்கள் மற்றும் சில சிறு சிறு கையாளும் பொருட்கள், அப்பாவிற்கென்று கொடுக்கப்பட்டன. அவர் அன்புடன் அவற்றைப் பார்த்து, தொட்டு மகிழ்ந்து சிறு மூட்டை கட்டி அறைக்குள்ளே தூக்கிக் கொண்டு போன அப்பாவின் பின்புறக்காட்சி ......பிறகு சென்ற மாதம் (மே.5.1995) தொலைபேசியில் (இறுதியாக) என்னுடன் பேசியபோது, " அந்த சிறுசிறுப் பொருட்களையெல்லாம் இப்போதுதான் வெளிப்பையி லிருந்து உள்ளே பேழைக்குள் இடம் பெயர்த்து காப்பாய் வைத்திருக்கிறேன். அம்மா.. இனிமேல் தான் அவற்றை எல்லாம் எடுத்துப் பார்த்துப் பயன் படுத்த வேண்டும்..டா" என்று உடல் நலம் பெற்றுவந்த உணர்வுடன் என் செவியில் மட்டும் விழுந்த சொற்களை எண்ணுகிறேன். நெஞ்சம் மேலும் மேலும் வலிக்க, அப்படியே அமர்ந்து ஒவ்வொன்றாய்ப் பார்க்கிறேன். சிறுஞெகிழி முள்கரண்டி, உறிஞ்சுகுழல் (Straw) இவைபோன்ற விளையாட்டுத் தனமான பொருள்களைக் கூட குழந்தை போல் என்னிடம் பெற்று, அந்தப் பைக்குள் செருகியிருந்ததைப் பார்க்கிறேன். என் நெஞ்சம் தாளாது, என் கண்ணீர் பற்றாது அம்மாவிடம் அணுகி, அம்மாவை மட்டும் அழைத்துவந்து என் உணர்வுகளைப் பகிர்கிறேன். அம்மாவின் இறுக்கமாயிருந்த இடிந்துபோன நெஞ்சம் மேலும் இளகி உருகி ஓடுவதைக் கண்டு என் உணர்வுகளை அடக்கி, விரைவு விரைவாக வெள்ளை மூட்டை - முடிச்சைத் திரும்ப உள்ளே வைத்துவிட்டுப் பூட்டிவிட்டு அம்மாவை அழைத்துக் கொண்டு வெளியே வந்தேன்.... நாட்கள் சென்றன.

இனிமேல் என்னுடைய உணர்வுக்கு முதலிடம் கொடுக்காது, கடமை, குறிப்பிட்டிருந்த நேரம், காலம் இவற்றைக் கணக்குப் போட்டுக் கொண்டு திறப்புக் கொத்துகளுடன் அறையின் உள்ளே மீண்டும் காலடி வைக்கிறேன். முன்னால் நோயாளி போன்று நான் உணர்ந்த உணர்வை அகற்றி மருத்துவராய்ச் செயல்படத் தொடங்கினேன். வெற்று உணர்வுடன் உள்ளே ஒவ்வொன்றாய்க் கணக்கெடுக்கத் தொடங்கினேன். அப்பச்சைப் பேழையின் ஒரு பகுதியை அக்காள் தேன்மொழியுடன் அதே வெற்று உணர்வுடன் விரைவாகக் கணக்கெடுத்தேன். தேனின் மனம் அவ்வப்போது இளகி உருகுவதைக் கண்டும் காணாதது போன்றும் கவனத்தில் தொடர்ந் தேன். எப்படியோ ஒரு பேழைமுடிந்தது. மறு பேழையையும் அதே கடமையுணர்வோடு கணக்கெடுத்துக் கொண்டிருந்தேன்

அப்பா அவர்கள் 13, 14 அகவையின் தொடக்கம் முதலாய் எழுதிய பாடல்களின் கையெழுத்து மூலச்சுவடிகள்! 'கவிதை' என்ற அட்டைப் படத்தைத் தாமே கைப்பட வரைந்து உருவாக்கிய இரண்டு முழுநூல்கள். ஒவ்வொரு பாடல்களின் தலைப்பையும், பாடல்களின்

பொருளுக்குத் தகுந்த படங்களையும் தாமே வரைந்து பின்பு பாடல்களில் எழுத்து மணிகளை வரிசைவரியையாய் அடுக்கி வைத் திருந்த அந்தப் பாமாலைகளைக் கண்டேன். அப்பா ஓவியர் என்பது ஏற்கனவே தெரிந்திருந்தாலும் (பழைய தென்மொழி அட்டைப் படங்களில் சில அவர் வரைந்தவை) சிறு அகவையிலும் கூட வரைந்து வைத்திருந்த அந்த ஓவியங்களைப் பார்த்தால் ஓவியக்கலையே வாழ்க்கையாய்க் கொண்டிருக்கும் ஓவியக்கலைஞர்க்கு ஈடான ஓவியங் களை எப்படி இந்தப் பாவலர் வரைந்தார் என்று பெரு வியப்புடனும் ஆர்வத்துடனும் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். அப்போது முகிழ்த்தப் பாடல்களில் பல இன்னும் வெளிவராது இருப்பதனால் அவற்றை ஓவியங்களோடு வெளியிடுவது இன்றியமையாதது என்ற அப்போதைய காப்பு எண்ணத்துடன் அமைதியாக மூடிவைத்தேன். மிகவும் காப்புப் படுத்தி வைத்தப் பொருட்களில் அவை தாம் மிகவும் இன்றியமையாதன என்ற அதே வகையான காப்பு உணர்வுடனும் ஒரு வகையான அச்ச உணர்வுடனும் கணக்கெடுத்து முடித்த பின்பு என் கண்களில் பட்ட மற்றுமோர் இன்றியமையாத ஒன்று, அப்பா தம் உயிரை வருத்தி நாள்தோறும் எழுதி வந்திருந்த 'திருக்குறள் மெய்ப்பொருளுரை'

மிசையின் மீது தம் நாற்காலிக்கு முன் அணியமாக வைத்திருந்த எழுத்துப்படிகள் அடங்கிய அட்டையுடன் எடுத்துப் பார்க்கையில் மெய்ப்பொருளுரையில் 7ஆவது பகுதியில் 19ஆவது பக்கத்தின் 4 வரிகள் வரை எழுதப்பட்டிருந்ததைக் கண்டேன். நாள்தோறும் விடிவதற்கு முன் எழுந்து காலைக்குடிப்புக்கு முன் அனைவரும் அமைதியாய் உறங்கும் நேரத்தில், சிறு ஒலியுமின்றி மிக அமைதியோடு எழுதிக் கொண்டிருப்பதற்கு அந்த வரிகள் முற்றுப் பெற வைத்திருப்பது தெரிந்தது..தொடக்கம் முதல் அந்த வரிகள் வரையிலும் கணக்கெடுத்துப் பின் காப்பாக ஒரு பக்கம் வைத்துவிட்டு, அப்பாவின் மற்றப் பெட்டிகளின் இருப்புக் கணக்கைத் தொடர்ந்தேன். இதுவரை பெரும்பாலும் நூல்கள் தொடர்பான பணிகள் முடி வடைந்து விட்டன. இப்போது வரையிலும் 'மருத்துவ' ஆராய்ச்சிப் பணி சிறப்பாக தொடர்ந்து நடந்தது. இனிக் கணக்கு எடுக்க வேண்டியவை. அப்பாவின் உடைமைகளும், துணிமணிகளும், அப்பா அறையினுள் அப்பா புழங்கிய, பயன்படுத்திய மிசைப் பொருட்களும், அவர் பொருட்களும்!

அடுத்து துணிப் பெட்டிகளைத் திறந்தேன். 'கம்' என்ற மணம்! அதனூடே அப்பா மணம் ! அப்படியே சிலிர்க்கிறது. அப்பாவின் மணம் இப்பெட்டிக்குள்ளே நிரவிக் கிடக்கிறது. பிறகு என் உணர்வுகளை ஒருவாறு சரி செய்து கொண்டு மீண்டும்

கடமையுணர்வுடன் கணக்கெடுப்புப் பணி தொடர்ந்தது. ஒவ்வொரு துணியும் துண்டும் ஒவ்வொரு கூட்டத்தின் கதையைச் சொல்ல, ஒவ்வொரு நேரியலையும், அந்த ஊரையும் அதனைப் போர்த்திய அன்பரையும் நினைவுபடுத்தும். அப்பாவின் துணிமணிகள் வெறும் துணிமணிகள் அல்ல. அவருடைய உழைப்பின் அப்போதைய பயன்கருதிப் பாராட்டிய சான்றுகள், நேரியல்களாகவும், துண்டுகளாகவும், ஒளிவீசுவதை நன்றாக உணரமுடியும். அனைத்தையும் கணக்கெடுத்து முடித்து விட்டு ஒரு முழுமூச்சு விட்டேன்.

முடிவாக, ஊர்திரும்பும் நாளில் கணக்கெடுத்த பகுதி , அப்பா நொடிக் கொருமுறை திறக்கும் மிசையின் வலது இழுவைகள்! ஒரு வீட்டில் விரைவு உதவிகளுக்குத் தேவையான கையடக்க இன்றியமையாப் பொருள்களைத் தாங்கியிருந்தது. ஓர் இழுவை ! மேல் இழுவையில் தூவல்கள், சிற்சில கைக்கருவிகள் இவற்றுடன் வினாவை எழுப்பியது. அப்பா அன்றாடம் பயன் படுத்தும் வழலை அட்டைப் பெட்டி, ஏன் இப்படி வழலையைப் பெட்டியோடு பாதியாக அறுத்து வைத்திருக்கின்றார் என்று எண்ணி எடுத்துப் பார்க்கையில், அந்த அரை 'மெடிமிக்சு' வழலைப் பெட்டி, ஒரு குட்டி திருக்குறளைக் கவ்வி அழகாகப் போர்த்தப் பட்டிருந்தது.

இழுவைப் பணிகளையும் முடித்துவிட்டுப் பின்பு, ஒரு பக்கம் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த அப்பா பயன்படுத்திய சில இன்றியமையாத சிறுசிறு பொருள்களைக் கணக்கெடுக்க நேரமின்றி அப் பணியை மட்டும் அக்கா தேனுவிடம் ஒப்படைத்துவிட்டு அன்றிரவு புறப்படுவதற்கு முன் ஏறக்குறைய முற்றிலும் கணக்கெடுத்து முடிக்கப் பெற்ற அப்பா அறைக்குள்ளே இருந்து கொண்டு, நான் அங்கு வந்த காரணம், திரும்பி செல்லும் கடமை, அப்பாவிடம் விடைபெறாது ஊர் திரும்ப விருக்கும் நிலைமை, அம்மாவையும் உடன்பிறந்தோர் களையும் விட்டுவிட்டுச் செல்லும் பிரிவுணர்வு, அப்பா விட்டுச் சென்ற பணிகளில் ஒரு சிறுபகுதியிலும் கலந்து கொள்ளாத நிலை. இத்தனை உணர்வுகளையும் அசைப்போட்டுக் கொண்டே என் தந்தையின் திருவுருவப்படத்தின் மீது என் முகம் புதைத்து உள்ளுருகி சென்ற ஆண்டு இதே திங்களில் அப்பாவிடம் நேரில் சொல்லிக் கொண்டு புறப்பட்ட அந்தப் பசுமை உணர்வைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டுப் பின்பு அப்பாவைத் தாங்கிய என் அம்மாவைப் பிடித்து அனைத்து உணர்வுகளையும் அவர்கள் மேல் அழுத்தி உணர்த்தி விட்டு என் புறவிடம் பறந்தேன். அங்குக் கணக்கெடுக்கையில் என் உள்ளத்தில் வந்து மோதிய என் தந்தை பற்றிய அனைத்து உணர்வுகளும் இங்கு என்னிடமே உள்ளன. அப்பா இப்போது இங்கு என்னுள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் !

ஈழத்தமிழரை ஆதரிக்கிறேன் என் தலை கொய்யினும் கொய்க!

தமிழினத்தின் விடிவிற்கும் தமிழ் மொழியின் வாழ்விற்கும் அன்றாடம் அல்லும் பகலும் தம் பேச்சாலும், மூச்சாலும் பாடுபட்ட பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் மறைவு தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பெரிய பேரிழப்பாகும்.

'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ற புரட்சிப் பாவலர் பாரதி தாசனின் சூளுரைக்கு இலக்கியமாகவும் இலக்கணமாகவும் வாழ்ந்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

படை பலவரினும் தடை பல இருப்பினும் அவற்றை உடைக்கக் களத்தில் தனிப் போராளியாக விளங்கியவர். 'தடா' சட்டமா? புலித்தடைச் சட்டமா ? எந்தச் சட்டம் பாய்ந்தாலும் கொஞ்சமும் அஞ்சாது, விழித்த கண் மூடாதவர்.

சிறை, பாவலரேறு பெருஞ்சித்திரனாரைப் பொறுத்த அளவில் புகுந்தவீடாக இருந்தது.

எப்பொழுதும் அவரின் திருவாய் தமிழ், தமிழன், தமிழ்நாடு என்று முழங்கிக் கொண்டிருந்தது.

"வாழ்ந்தாலும் தமிழுக்கும் தமிழர்க்கும் வாழ்வேன்!
வளைந்தாலும் நெளிந்தாலும் தமிழ்ப் பொருட்டே ஆவேன்!
தாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் தமிழ்மேல்தான் வீழ்வேன்!
தனியேனாய் நின்றாலும் என்கொள்கை மாறேன்!

சூழ்ந்தாலும் தமிழ்ச்சுற்றம் சூழ்ந்துரிமை கேட்பேன்!
சூழ்ச்சியினால் பிரித்தென்றன் உடலை இருகூறாயப்
போழ்ந்தாலும் சிதைத்தாலும் முடிந்த முடிவதுவே!
புதைத்தாலும் எரித்தாலும் அணுக்களெல்லாம் அதுவே!"

சொல் ஒன்று, செயல் வேறு - இப்படி வாழ்பவர்களை உலகில் அதிகம் பேர் இருக்கிறார்கள். ஆனால் சொல்லும் செயலும் ஒன்றென வாழ்ந்து காட்டியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

எதைப் பற்றிப் பாடினாரோ அதைப் போலவே இம்மியளவும் வேறுபடாது வாழ்ந்து காட்டினார்.

என் மனைவி, என்மக்கள், என் குடும்பம், என் வீடு என்று சுவர் எழுப்பி, 'உண்டு உடுத்து வாழ்ந்தேன் நான், இரண்டு கால் மாடு

போல' என்று வாழாமல், உலகில் உள்ள எட்டுக் கோடித் தமிழர்களின் விடிவுக்கு எழுச்சிப் பா பாடியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

தமிழ்நாடு, தில்லியின் வல்லாளுமையிலிருந்து விடுதலை பெற வேண்டும், தமிழீழம் சிங்கள வல்லாளுமையிலிருந்து விடுதலைபெற வேண்டும் என்று ஓயாது ஒழியாது குரல் கொடுத்த பாவலரேறு அவர்கள்,

"மனைவிக்கும் மக்களுக்கும் மாளிகையில் வாழ்வதற்கும்
மற்றெதற்கும் பல்லிளிப்புக் காட்ட மாட்டேன்."

"என் மொழியை என் இனத்தை என் நிலத்தை மாற்றானிடம்
இட்டுவிட்டுச் சோம்பிவிட உள்ளம் இசையேன்."

"ஆண்டு நூறானாலும் அன்னைத் தமிழ்நாடு
வேண்டும் விடுதலை எண்ணம் விலக்கோம்யாம்
பூண்டோம் உறுதி புறப்பட்டோம் என்றே நீ
மூண்ட இடியாய் முழங்காய்த் தமிழ் மகனே!"

என்று நாள்தோறும் போர் முழக்கம் முழங்கியவர்.

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல்செயப் புறப்படு வெளியில்!"

இந்த வீரம் தோய்ந்த பாடல் வரிகளைப் பாடிய பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த தமிழ்நாட்டில் சிறிது காலத்திற்கு முன், 'புலி' என்றாலே,

இழுத்துப் போங்கள் காவல் துறைக்கு;
தள்ளி விடுங்கள் சிறைக் கூட்டுக்குள்!

என்று ஆணவம் பிடித்த ஆட்சியாளர்கள் கொக்கரித்தார்கள். 'தடா' அவர் மீது வீசப்பட்டபோது.

'இதோ நான் ஒருவன் இங்கிருக்கின்றேன்.
எனைச் சிறை செய்யினும் செய்க!
ஈழத் தமிழரை ஆதரிக் கின்றேன்
என் தலை கொய்யினும் கொய்க!"

என்று பெருஞ்சித்திரனார் என்ற சிறுத்தை உறுமிற்று!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் சொற்களைத் தேனில் தோய்த்துக் கொடுப்பதில்லை. இரும்பைக் காய்ச்சிய நெருப்புக் குழம்பில் சொற்களைத் தோய்த்துக் கொடுப்பார்.

1987-இல் தமிழீழத்தில் புகுந்த இந்திய 'வானர'ப்படை தமிழ் நிலத்தை எரித்து உருக்குலைத்த போது, தமிழ்ப் பெண் குலத்தை வேட்டையாடி, அவர்கள் கற்பைச் சூறையாடிய போது, பொது மக்களை இரக்கமின்றிக் கொன்றுவிட்டுப் புலிகள் எனப் பொய்ச் செய்தியைப் பரப்பிய போது பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் சீற்றம் இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ் காந்தி மீது பாய்ந்தது. அவரது நெற்றிக் கண் திறந்தது. சொல் துண்டுகள், குண்டுகளாக வெடித்தன.

"சிங்களக் கொலைஞன் செயவர்த்தனன் எனும்
வெங்கணன் விரித்த வலையினில் விழுந்து
செந்தமிழ் இனத்தைச் சீரழித்திடவே
முந்து இராசீவ் என்னும் முண்டையின் மகனே!
யாழ்த் தமிழ் மக்களின் யாக்கைகள் எல்லாம்
போழ்த்துயிர் குடிக்கும் அரக்கப் பூதனே!
நீயுநின் துணையும் நின்னிரு மக்களும்
ஏயுமிவ் வுலகத்து இருக்குநாள் தோறும்
எந்தமிழ் நல்லினத் தேற்றம் குலைதலால்
வெந்தழியும் நாள் விரைந்துனக்கு கெய்துக!
வீழ்ச்சி யுறுக! நின்னுடல் வெடித்துச்
சுக்கு நூறாகச் சிதறுக!"

என்று அறம் பாடினார்.

பாவலர்கள் பலரைப் பார்க்கலாம். மங்கையையும், மதுவையும், வெண்ணிலவையும், தென்றலையும் இன்னும் பாடி மகிழும் பாவலர்கள் பலருண்டு.

ஆனால், என்மொழி, என்னினம், என்நாடு என முழக்க மிடும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்ற கூழுக்குப் பாடாத பாவலர்களைப் பார்ப்பது அருமை!

"என் மொழி என்னினம் என் நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் – வேறு
எவரையும் புகழ்ந்துரை சொல்ல மாட்டேன் –வரும்
புன்மொழி பழியுரை துன்பங்கள் யாவையும்
பொருட்டென மதித்துளம் கொள்ளமாட்டேன் –இந்தப்
பூட்கையில் ஓரடி தள்ள மாட்டேன்!"

என்று பாடிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பெயர் இந்த வானும், வையகமும், நெருப்பும், நீரும், காற்றும், உள்ளளவும், கடைசித் தமிழன் உள்ளளவும் வாழும்.

தமிழுக்கும் தமிழினத்துக்கும் தொண்டு செய்தோர் சாவதில்லை!

நன்றி : **'எரிமலை'** செப்தம்பர்' 1995

<u>சென்ற இதழ்த் தொடர்ச்சி</u>

பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சிகள்

திருக்கழுக்குன்றம், தேசுமுகிப் பேட்டை மறைமலையடிகள் மன்றத்தின் சார்பில் 23-9-95 அன்று மலையடிவார மண்டபத்தில் பாவலரேறு அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்த்திரு. கோ. முத்துப் பெருமாள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் புலவர் சி. சண்முகம் வரவேற்புரையாற்றினார். சொல்லாய்வு அறிஞர் அருளி, முனைவர் சுப. வீரபாண்டியன், திருவாட்டி இறை. பொற்கொடி, திரு. வீ. தமிழ்மணி, பாவலர் பல்லவன் முதலியோர் உரை நிகழ்த்தினார்.

மன்றத்தினர் முப்பதாயிரம் (30,000) உருவா பணத்தை நிலை வெள்ளித் தட்டில் வைத்து அம்மா தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களிடம் தென்மொழிக் குடும்ப நலக்கொடையாக வழங்கினார்.

ஐயா அவர்களின் படத்தினைத் திறந்து வைத்து முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் உரையாற்றினார். திரு. வீ. இறையழகன் நன்றி நவின்றார்.

நிகழ்ச்சிக்கு வந்திருந்தோர் அனைவருக்கும் மாலைச் சிற்றுண்டியும் இரவு விருந்தும் மன்றத்தின் சார்பில் அளிக்கப்பெற்றன. தேசுமுகிப்பேட்டை ஊர்ப் பொதுமக்கள் ஐம்பது அயிரெடை அரிசியும், அரிசி வணிகர் திரு. ம. மயிலப்பர் இருபத்தைந்து அயிரெடை அரிசியும் குடும்பநலக் கொடையாக அளித்தனர்.

திருப்பூர் : தமிழர் பேரவை சார்பில் 30.7.95 அன்று கே.எசு.ஆர். திருமண மண்டபத்தில் ஐயா அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. திருவாளர்கள் பெ.ந.சந்திரசேகர், தமிழப்பன், மாசிலாமணி - முன்னிலையில்; தென்மொழி துரையரசன் தலைமையேற்க, மக்கள் பாவலர் இன்குலாப், பேரா. அப்துல் காதர், கோவை கு. இராமக்கிருட்டிணன், பாவலர் ம.க.ஈழவேந்தன், வெ.ஆறுசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். மேலும் திருவாளர்கள் ப.பெரியசாமி, செ.முத்துக்குமாரசாமி, மு. சக்திவேல், சண்.பாண்டியநாதன், 'பிரின்சு' வேலுச்சாமி, முத்து ஆகியோர் உரையாற்றினர்.

குடந்தை : விடிவெள்ளி ஆங்கிலப் பள்ளியில் திரு. சு.இளஞ்சேட் சென்னி தலைமையில் 23.7.95 அன்று உலகத் தமிழ்க் கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில் கன்னித்தமிழ் அறிஞர், நினைவில் வாழும் தனித்தமிழ்ப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் மறைவுக்கு, கையறுநிலைத் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது என உலகத் தமிழ்க் கழகப் பொதுச் செயலாளர் திரு. கதிர் தமிழ்வாணன் தெரிவிக்கின்றார்.

திண்டிவனம் : காந்திசிலை அருகில் 5.8.95 அன்று தமிழ்நாடு இளைஞர் பேரவை சார்பில் ஐயா அவர்களின் நினைவேந்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. தமிழ்முகிலன் தலைமையில் புலவர். கு.கலியபெருமாள் பாவலரேறு அவர்களின் படத்தினைத் திறந்துவைத்தார். திருவாளர்கள் த. பழனெழுந்தி, மா.செ.தமிழ்மணி, கலைப்புலி ஆகியோர் உரையாற்றினர்.

சென்னை : சென்னையிலும் புறநகர்ப்பகுதிகளிலும் தமிழ்நாடு மார்க்சிய இலெனினியக் கட்சியினராலும் புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பிலும் பாவலரேறு நினைவேந்தல் தொடர் நிகழ்ச்சி 6.8.95 அன்று சென்னை அரண்மனைக்காரன் தெரு கோகலே அரங்கில் தொடங்கியது. தொடர்ச்சியாக 7.8.95 அன்று பல்லவபுரத்திலும்; 8.8.95 அன்று பாடி இடத் தெருவிலும்; 9.8.95 அன்று பொன்னேரியிலும், 10.8.95 அன்று ஓட்டேரியிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அனைத்து நிகழ்ச்சிகளிலும் தலைசிறந்த தமிழறிஞர்களும், பாவலர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் முகவர்கள் தங்களின் கணக்குகளில் இருக்கும் நிலுவைத் தொகைகளை உடன் அனுப்பி வைத்தால்தான் இதழ்களின் வெளியீடுகளுக்கு மிகப் பயனுடையதாக இருக்கும். பலமுறை நினைவூட்டு மடல்கள் விடுத்தும் தொகை அனுப்பாமல் இருப்பதால் இதழ்கள் தொடர்ந்து சரியான நேரத்தில் வெளிவருவதில் தடை ஏற்படுகிறது. ஆதலின் அன்பர்கள் நம் இதழ்களின் வளர்ச்சிக்குத் துணை நிற்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

— அமைச்சர், 'தென்மொழி'.

கருவூர்: நாரத கான சபாவில் உலகத் திருக்குறள் மையச் சார்பில் 6.8.95 அன்று திருக்குறள் மாநாடு நடைபெற்றது. திருக்குறள் சான்றோர்கள் படத்திறப்பு விழா நிகழ்ச்சியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் படத்தினைத் திறந்து வைத்து உரையாற்றினர்.

எண்ணூர்: அன்னை சிவகாமி நகரில் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கச் சார்பில் 15.8.95 அன்று ஐயா அவர்களுக்கு வீர வணக்கக் கூட்டம் நடத்தப் பெற்றது. முனைவர் அரு.கோபாலன், வழக்கறிஞர் வேணு கோபால் முதலானோர் உரையாற்றினர். நிகழ்ச்சியில் எண்ணூர்ப் பைந்தமிழ்ப் பாசறை, திருவள்ளுவர் தமிழ்க் கழகம், தமிழர் பாசறை, ஆகியவை பங்கேற்றன.

சென்னை: தியாகராயர் கல்லூரியில் தமிழ்வளர்ச்சிப் பேரவையின் சார்பில் இலக்கியத் தொடர் கூட்டத்தில் முனைவர் திரு. சுப. வீரபாண்டியன் பாவலரேறு ஐயாவைப்பற்றி உரையாற்றினார்.

சென்னை: இராயபுரம் ஆண்டியப்ப முதலி தெருவில் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் சார்பில் 25.8.95 அன்று விடுதலைப் போராளி ஐயாவுக்கு வீர வணக்கக் கூட்டம் நடைபெற்றது. திரு. உலகமுதல்வன் தலைமையேற்க சொல்லாய்வு அறிஞர் அருளியார், பாவலர் இன்குலாப், பேரா. அரசேந்திரன், திருவாட்டி இறை.பொற்கொடி, திருவாளர்கள் நுங்கை.பாபு, தமிழோசை, செல்வி கயல் முதலியோர் கலந்து கொண்டு வீரவணக்க உரை ஆற்றினர்.

புதுச்சேரி: கதிர்காமம் - முருகனடியார் திருமண நிலையத்தில் தனித்தமிழ்க் கழகத்தின் சார்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. திரு. சீனு அரிமாப்பாண்டியன் தலைமை ஏற்றார். திருவாளர்கள் மூர்த்தி ஐயா, பேரா. ம. இலெ. தங்கப்பா, த. மறைவாணன், விழுப்பரையன், புலவர் சி. வெற்றிவேந்தன். திருக்குறள் பெருமாள், முத்துச்சேரன், முனைவர் இரா. இளவரசு, முனைவர் இரா. திருமுருகன், முனைவர் அ.பசுபதி வ.சு.சம்பந்தம், நக்கீரன், மு.தேசிகன், தாமரைக்கோ பே.தமிழ்நாவன், வே. ஆறுமுகம், தமிழ்மாறன், சொல்லாய்வு அறிஞர் அருளியார் உரையாற்றினர்.

தென்மொழி நாள்காட்டி

ஐயா பாவலரேறு அவர்களின் முழுவண்ணப் படத்துடனும் அருங் கருத்துகளைத் தாங்கியும், அறிஞர் பெருமக்கள் பற்பலரின் நினைவுக் குறிப்புகளுடனும், தமிழ் ஆங்கில மாதங்கள் இணைந்து, அனைவருக்கும் பயன்படும் வகையிலும் பொலிவான தோற்றத்துடன் 'தென்மொழி நாள்காட்டி' வெளிவருகிறது!

விலை : உரு. 15.00

அன்பர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தொடர்புகொள்க!
பத்துப் படிகளுக்குமேல் வாங்குவோர்க்குக் கழிவு உண்டு.

தென்மொழி அச்சகம், சென்னை-600005. தொலைபேசி : 847 829